Registered as a Newspaper

... 1. விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 27 (11 3 94) வெள்ளிக்கிழமை ஓசை 21

## க. பொ. த. (சா/த) பரீட்சை மார்ச் 31க்குள் முடிவுகள்

க. பொ. த. சாதாரண தர பரீட்சை முடிவுகள் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் வெளியிட சகல நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். பாடசாலைகள் முதலாம் தவணை முடிவடைவதற்கு முன்னர் இம் முடிவுகள் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும், க. பொ. த. உயர்தர (12ஆம் பக்கம் பார்க்க)

### —சிறிலங்காவின் ராணுவத் தளபதி—

# லெப். ஜெனரல் ஜெரி சில்வாவை ஓரங்கட்ட அரசாங்கம் முடிவு?

## பாதுகாப்புச் செயலராக சிசில்

(கொழும்பு)

சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி சில்வாவை ஓரங்கட்டும் நடவடிக்கைகள் அரசாங்க உயர் மட்டத்தில் இடம்பெற்று வருவதாக கொழும்பிலிருந்துவெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது. அத்தோடு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவையும் கழற்றிவிட்டு புதிய செயலாளராக பதவி விலகிய முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவை நியமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள 'ராவய' பத்திரிகை முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிப்பதற்கு துரித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பொதுத்தேர்தலுக்கு முன்னர் இந் நியமனம் வழங்கப்படவுள்ளதாக அது மேலும் கூறுகிறது.

தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவிற்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்கப்படவுள்ளதாகதெரிய வருகிறது.

இதேவேளை தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் பதவிக்காலம் முடிவடைந்ததும் அவருக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட மாட்டாது எனவும் தற்போ (12ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவின் நடவடிக்கை சந்தேகமாக உள்ளது

அரச அதிகாரி தகவல்

(கொழும்பு)

கனடா தனதுநாட்டிலேயே கியூபெக் தொடர்பாக பாரதூரமான இனப்பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கிறது அவர்கள் தமது பிரச்சினைக்குத் தாம் தீர்வு காணமுடியாமல் இருக்கும்போது எமக்கு பிரச்சினை தீர உதவ முன்வருவது சந்தேகத்தை ஊட்டுவதாக இருப்பதாகச் சிறிலங்கா அரசின் உயர் அதிகார வட்டாரங்கள் கூறியுள்ளன.

அமைச்சர் தொண்டமானு (11ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவின் அழைப்பு; முடிவு இன்னும் இல்லை

தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

கனடாவில் இருந்து கிடைத்த அழைப்பு குறித்து என்ன பதில் அளிப்பது என்பது பற்றி இன்னமும்தான் முடிவு செய்யவில்லை யென்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

அவர் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், கனடாவிலிருந்து கிடைத்த அழைப்பு தொடர்பாக தான் அரசுக்கு தெரியப்படுத்தியதாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் தீவினுள் புலிகள் அதிரடி
## 6 படை பலி; 12 பேரை காணவில்லை

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார்தீவில் இராணுவ பொலிஸ் கூட்டு மினி முகாம் மீது விடுதலைப்புலிகள் துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத் தாக்குதலின்போது மினிமுகாமும், 5 காவலரண்களும் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன. இதன்போது ஆறுக்கும் மேற்பட்டோர் கொலைப்பட்டதுடன், ஏனையோர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர். இவர்களில் 12 பேரைக் காணவில்லை என ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன. ஆயுதங்கள் பல விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ் வெற்றிகரத் தாக்குதலின்போது மூன்று வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11-55 மணியளவில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியான மன்னார்தீவில் 5ஆம் கட்டை இராணுவ பொலிஸ் மினி முகாமிலிருந்து 600யார் தூரத்திலும் 4ஆம் கட்டை இராம சபை இராணுவ பொலிஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மன்னார்)

மன்னார்தீவில் இராணுவ பொலிஸ் கூட்டு மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகர அதிரடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

| | | |
|---|---|---|
| ∴ ரி 56-1 ரகதுப்பாக்கி | - | 04 |
| ∴ இதன் ரவைக் கூடுகள் | - | 12 |
| ∴ எஸ். எல். ஆர். ரகதுப்பாக்கி | - | 02 |
| ∴ இதன் ரவைக் கூடுகள் | - | 02 |
| ∴ நடுத்தர ரவைகள் | - | 2052 |
| ∴ பி கே. ரக ரவைகள் | - | 500 |
| ∴ நேற்ரோ ரவைகள் | - | 300 |
| ∴ ஏ. கே. கோல்சர் | - | 03 |
| ∴ ஜே ஆர் ரக கைக்குண்டு | - | 03 |
| ∴ தொலைதொடர்பு சாதனம் | - | 01 |
| ∴ ரவைப் பெட்டி | - | 02 |
| ∴ பொலிஸ் சீருடைத் தொப்பி | - | 01 |
| ∴ சாதாரண தொப்பி | - | 01 |

## இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று சகல அவசர அனுமதி வழங்கும் செயலகங்களும், அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களும், அலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும் மூடப்பட்டிருக்கும் என்பதைப் பொது மக்களுக்குப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

## அநுராதபுர மாவட்டத்தில் படையினர்-புலிகள் மோதல்

(கொழும்பு)

அநுராதபுரம்மாவட்டத்தில் கட்டுக்கெனியாவை என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுத் திடீர் மோதலொன்று இடம் பெற்றது

சில மணிநேரம் இருதரப்பினருக்குமிடையில் கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது இத்துப்பாக்கிச் சமரின்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து நேற்று நள்ளிரவு வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

## மூன்று போராளிகள் வீரச்சாவு

(மன்னார்)

மன்னார் தீவில் தாராபுரம் பகுதியில் அமைந்திருந்த இராணுவ பொலிஸ் கூட்டு மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கொண்ட அதிவேக அதிரடித்தாக்குதலின் போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் அன்பரசன் (எலியாஸ்பிள்ளை சந்திரசேகர் - நித்திக்கண்டல் அடம்பன் மன்னார்)

கப்டன் மணிவர்ணன் (ரோமுவால்ட் மரியதாஸ் - இசைமாலைத்தாழ்வு முருங்கன்), 2ஆம் லெப்டினன்ட் விஜயதாசன் (இராசலிங்கம் வசந்தகுமார்-பூநகரி பள்ளிக்குடா)

ஆகிய மூன்று போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## குடும்ப அட்டை திருத்தம் கால எல்லை நீடிப்பு

குடும்பப் பதிவு அட்டை திருத்தம் செய்ய பொது மக்களின் வசதி கருதி கால எல்லை யூன் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

**'அகிலன்ஸ்'**
சகலவிதமானவாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள் ÷ கறுப்பு) எழுத்தோவியர் அகிலன்ஸ், 426 கண்டி வீதி, அரியாலை. (7702)

**ஒருமாதகோழிக்குஞ்சு விற்பனைக்கு**
லைகன் பிறவுண் ஒரு மாத பேட்டு குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஒரு குஞ்சு நூற்றிப்பத்து ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு:- கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. (கி-8814)

**வாங்குகிறோம்**
கல்தேக்குவிதை(சுத்தாப்பு) விலைக்கு வாங்குகிறோம். தொடர்பு:- மில்க்வைற். (கி-8813)

**பசன் கன்றுகள் விற்பனைக்கு**
ரூபா 10/- மட்டுமே. சொற்பளவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. TASTE LINE INDUSTRIES (PVT) LTD. No- 14, Seenier Lane, Jaffna- (சி-8816)

**SPECIAL ENGLISH WITH GRAMMAR**
ஃ BASIC ஃ SPOKEN
By experienced teacher, Classes start on 15-3-94 Tue 3-00 P. M. SHAMROCK, J. CHUNDIKULI. (7706)

# சமாதானத்தின் எதிரிகளே புரளிகளைக் கிளப்புகின்றனர்

## சர்வோதய தலைவர் ஆரியரட்னா

(கொழும்பு)
சமாதானம் வருவதை எதிர்ப்பவர்களே எமது யாழ்ப்பாண விஜயத்தின் பின்னணியில் மறைவான காரணங்கள் இருப்பதாக புரளி கிளப்புகின்றனர். ஆனால் சமாதானம் வருவதை இவர்கள் எதிர்ப்பதற்கு எத்தகைய மறைவான காரணங்கள் இருக்கக்கூடும்? இவ்வாறு சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ணா கொத்மலை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போது கேள்வி எழுப்பினார்.

தமது யாழ்ப்பாண விஜயத்தின் நோக்கம் பற்றி அவர் மேலும் விபரிக்கையில், சமாதானம் இல்லாவிட்டால் அபிவிருத்தியினால் உண்மையில் மக்களுக்கு பயன் கிட்டாமல் போய்விடும். பௌத்த சிங்களத்தை பாதுகாப்பதாகக் கூறும் பலரும் கிராமங்களுக்குச்சென்று அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காகப் பாடுபடுவதில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு போரின்மூலம் தீர்வுகாண முற்படுபவர்களின் தவறான வழி [illegible] இசைந்து போகக்கூடாதெனவும் அவர் கேட்டுக்கொண்டார். யுத்தம் என்பது ஆயுத வியாபாரிகளுக்கும், சமாதான காலத்தில் சமுகத்தில் முக்கியத்துவம்பெற முடியாத தீவிரவாதிகளுக்கும் மட்டும் தான் வாய்ப்பு அளிப்பதாகும். இந்தப் போரில் இருதரப்பும் நன்கு ஆயுதபாணிகளாகியுள்ளனர் என்பதுடன் ஒரு தரப்பினரை முற்றாக அழித்து மறு தரப்பு வெற்றிகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை இப்போதாவது உணர்ந்துகொள்ளவேண்டும்.

மேலும் முழு நாடும் சமாதானப் பாதையில் ஆக்கபூர்வ பங்களிப்பைச் செலுத்த முன்வரவேண்டும். யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டபின்னர் ஆறு மாவட்டங்களைச்சேர்ந்த சுமார் 20,000 பேருடன் தான் பேசியதாகவும் எவரும் தனது கருத்துகளுடன் முரண்படவில்லையெனவும், அனைவரும் சமாதான முயற்சியை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நிலவுரிமை மற்றும் அதிகாரங்கள் தொடர்பான அரசியல் பேச்சுவார்த்தைகள் மனமாற்றம் ஒன்று ஏற்படாதவிடத்து வெற்றியளிக்கப்போவதில்லை. இத்தகைய மனமாற்றம் ஒன்றை ஏற்படுத்தவே தான் முயலுவதாகவும், அரசியல் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பே ஆகும் எனவும் அவர் தெரிவித்தார்.

## யாழ். பல்கலை. பேராசிரியர்கள் ஜனாதிபதி விருதினை பெற்றுக்கொள்ள மறுப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இருவர் தமக்கு வழங்கப்பட்ட தேசிய விருதை ஏற்க மறுத்துள்ளதாகத்தெரியவருகிறது.

யாழ் மாவட்டத்தில் பாரம்பரியக் கலைகளுக்குப் பேராசிரியர் கா. சிவத்தம்பியும், பேராசிரியர் அ. சண்முகதாசும் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவர்களுக்கு 1994 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி தேசிய விருது வழங்கப்படவுள்ளதாகச் செய்திவெளிவந்தது தெரிந்ததே.

இதுகுறித்து அவர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு எழுதிய கடிதத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த விருதை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆங்கில பரீட்சை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)
தேசியஆங்கிலதராதரப்பத்திர பரீட்சை பகுதி II க்கான விண்ணப்பங்கள் ஜனவரி மாதம் 31-ம் திகதிக்குமுன்னர் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவித்திருந்தபோதிலும் இப்பரீட்சையின் I-ம் தரப் பெறுபேறுகள் அண்மையில் கிடைத்தமையால் பலர் விண்ணப்பிக்க முடியாமல் போய்விட்டது.

எனினும் பகுதி II ஐத் தொடர விரும்புபவர்களது விண்ணப்பங்களை ரூபா 175/- ஐ தபாற்கந்தோரில் ஆணையாளர், பரீட்சைத் திணைக்களத்தின் பெயரில் செலுத்திய பின் அரசாங்க அதிபரிடம் இன்று சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (தி) (பா)

## பட்டதாரி பயிலுனருக்கு பொருத்தமான பதவிகள்

திட்டமிடல் அமைச்சில் 1978ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் பட்டதாரிப் பயிலுனர்களாக இருந்து நிரந்தர நியமனம் பெறாதவர்களுக்குப் பொருத்தமான பதவியும் அதற்குரிய சம்பளமும் வழங்கப்படவுள்ளன. திட்டமிடல் அமைச்சு இது சம்பந்தமான பணிப்புரையை அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் வழங்கியுள்ளது. 01-06-1992 முதல் இவர்கள் 36,000 - 15×1,200-54,000 என்ற சம்பள விகிதத்தில் அமர்த்தப்படுவார்கள்என்று யாழ். அரச அதிபர் வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தான ஆதரவில் நடாத்தும்

## சைவசமயப் பெருவிழா

இடம்: யா/ இராமநாதன் கல்லூரி மண்டபம்
காலம்: 13-03-1994 ஞாயிறு காலை 8-30 - 1மணி வரை
தலைவர்: துர்க்கா துரந்தரி, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி
ஆசியுரை: மகாராஜஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள்
தொடக்கவுரை: திரு: ஆ: மகாலிங்கம் (மேலதிக அரச அதிபர், உடுவில்)
ஆய்வுரைகள்: 1) ''இந்துக் கிரியைகள்'' கலாநிதி ப. கோபாலகிஷ்ணன் (தலைவர் இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக் கழகம்)
2) ''வரலாற்று நோக்கில்'', ''சைவசித்தாந்தம்'' கலாநிதி நா. சுப்பிரமணியன் (முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை யாழ். பல்கலைக் கழகம்)
3) ''வீரசைவம் - ஓர் ஆய்வு'' திரு. M. வேதநாதன் M. A (முதுநிலை விரிவுரையாளர் இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக் கழகம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மணிவிழாச்சபை, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி. (7709)
ஏ. சி. பொன்னுத்துரை
வைத்தியகலாநிதி எஸ். பிரபாகரன்
இணைச் செயலாளர்கள்

## பரீட்சைகள் ஆரம்பம்

(கொழும்பு)
பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களுக்கான சகல பரீட்சைகளும் மார்ச் மாதம் 30-ம் திகதி தொடக்கம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடைபெறாத பாடங்களுக்கான பரீட்சைகளே இவ்வாறு ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி

டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது, எதிர்காலத்தில் மேலும் அது விரிவடையலாம் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந் நிலையில், தென்மாகாண சபையில், இன்னும் பத்து தினங்களில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் டி. பி, விஜேதுங்காவின் அரசியல் எதிர்காலம் குறித்த ஒரு மதிப்பீடாகவே இருக்கும் இதில் டி. பி, விஜேதுங்காவின் கொள்கைக்கான அறுவடை கிடைக்கக் கூடும். இது இனங்களின் எதிர்காலத்தையும் தீர்மானிக்க வல்லதாக மாறலாம்,

## வெற்றி

மயிலங்காடு - ஞானமுருகன் எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் ஆகிய இரு அணிகளுக்கிடையேயான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றியீட்டியது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் வி. க. எதிர்த்து பாஷையூர் அன்ரனிஸ் வி. க. மோதியது. இவ் இரு அணிகளும் இரண்டு கோல்களைப் போட்ட நிலையில் விளையாட்டு முடிவடைந்தது. தொடர்ந்து மோதுவதற்கு நேரம் போதாமையால் போட்டி நிறுத்தப்பட்டது.

வறிய மாணவர்களின் கல்வி நிதிக்காக
யா/ இந்து மகளிர் கல்லூரி
இன்ரறக்ட் கழகம்
நடாத்தும்
யா/ இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின்
**The Whirl Wind (சுழல் காற்று)**
(நாடகம்)
ACADEMY OF ORIENTAL MARTIAL ARTS
**SHOTOKAN**
கராட்டிக் கழகம் வழங்கும்
கராட்டிக் கண்காட்சி
காலம்: 11-03-94 வெள்ளி பி.ப. ?-00 மணி
இடம்: யா/ பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்
அன்பளிப்பு:
ரூபா 1000/- 500/- 50/- 20/-
(7708)

## நினைவு கூருகின்றோம்...

**1994.03.11**

1986-ம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவு-மாங்குளம், துணுக்காய், மல்லாவிப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஒரே கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய.

**ஜீவா** (சந்தையா கெங்காதரன் - பெரியதம்பனை, செட்டிக்குளம் - வவுனியா)

**ரஞ்சன்** (சரவணமுத்து சத்தியசீலன் - 2-ம் படிவம், வவுனிக்குளம், மாங்குளம்-முல்லைத்தீவு)

இதே தினம் வரையான இரு நாட்களும், இதே பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது தன்மானங்காக்கும் பொருட்டுத் தற்கொலை செய்து கொண்ட இளம் பெண் மற்றும் படுகொலை செய்யப்பட்ட 7 பேர் ஆகிய 8 தமிழர்கள்.

1987-ம் ஆண்டு அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**திருமால்** (வெள்ளக்குட்டி துரையன் - காரைதீவு-அம்பாறை)

1988-ம் ஆண்டு மட்டு-பெரியபுல்லுமலைப் பகுதியிற் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**யோகேஸ்** (பிரான்சிஸ் மனோகரன்-பெரியபுல்லுமலை-மட்டு)

திருமலையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்றை வழிமறித்த சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 15 தமிழ்ப்பயணிகள்.

முல்லைத்தீவு - முத்தையன்கட்டுப் பகுதியில் இந்தியப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்,

1991-ம் ஆண்டு திருமலை-கந்தளாய் அணைக்கட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிய போது வீரச்சாவெய்திய,

**வர்ணன்** (வேலாயுதம் ரதீஸ்குமார் இறால்வீதி, கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

1992-ம் ஆண்டு ஆனையிறவு - தட்டுவன்கொட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**ராகுல்/ராகுல்ராஜ்** (மகாலிங்கம் பகீரதன்-பிள்ளையார் கோவிலடி-மட்டு)

**லெப். டேவிட்-சந்திரன்** (மகேந்திரன் சியாமணி-வெல்கோவிலடி, புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**கப்டன் சிறீசங்கர்** (கார்த்திகேசு ஜெகதீஸ்வரன்-வேலணை மேற்கு, தீவகம்-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8812)

# சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா

# தமிழீழ மழலைகளின் விடிவெள்ளி

நவீன வசதிகளைக் கொண்ட வீடுகளோ வழி வாய்க்கால்களோ இன்றி பனை மரங்களால் சூழப்பட்டு இயற்கை அளித்த வடிவிலேயே காட்சியளித்துக் கொண்டு இருந்தது சுன்னாகம் தெற்குக் கிராமம்,

காங்கேசன்துறை வீதியிலிருந்து கிழக்குப் புறமாகவும் சுன்னாகத்திற்கு தெற்குப் புறமாகவும் உரும்பராய் வீதிக்கு மேற்குப் புறமாகவும் மையப் பகுதியை அண்டி அமைந்துவிட்ட இந்தக் கிராமத்தைப் பல பாதைகள் ஊடறுத்துச் செல்கின்றன.

இந்தக் கிராமத்தில் பல பகுதிகளிலும் வசித்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர். இவர்கள் புகையிரதப் பாதைகளில் தமது குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.



கரடுமுரடான பாதை ஒன்றினூடாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் இக்கிராமத்தின் மத்தியை நெருங்கியபோது அழகுபொங்க அனைவரையும் கவர்ந்திழுத்தவண்ணம் இருந்தது ஓர் அழகிய கட்டடம் அதனுள் இருந்து 'குழந்தைகள் நாம் குழந்தைகள் நாம் அன்னையின் அன்புக் குழந்தைகள் நாம்' என்ற புரட்சிப் பாடல் மழலைகளின் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது.

காற்றுடன் காற்றாகக் கலந்துவந்த அந்தப் பாடல் கேட்ட வழியேஉள்ளே நுழைந்தபோது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. புறச்சூழலை கண்ணுற்றவர்களுக்கு இந்தப் பகுதிபெரும்ஆச்சரியத்தையே கொடுக்கும். எண்கோணமண்டபம் ஒன்றிற்குள் மணல் பரப்பப்பட்டு, பாய்களை விரித்து விட்டு ஒரு மழலைகள் பட்டாளமே மிகவும் அமைதியாகவே அமர்ந்திருக்க இருமழலைகள் அந்தப்பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். இவர்கள் இருவரும் சுகிர்தா, வசந்தினி என்ற ஐந்துவயது பிள்ளைகள் என்பதை பின்னர் தெரிந்து கொண்டோம். இவர்கள் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவில் வளர்க்கப்படும் குழந்தைகள் என்பதை அறிந்து கொண்டோம்.

விடுதலை புலிகள் யாழ் மாவட்ட அரசியல்துறையினரால் ஆரம்பிக்கப்பட்டு கடந்த இரண்டாம் திகதியுடன் தனது ஓராண்டை பூர்த்தி செய்து இரண்டாவது ஆண்டில் வெற்றிகரமாகப்புகுந்து கொண்டிருந்தவேளை நாமும் அதற்குள் புகுந்து கொண்டோம்.

இங்குள்ள 'வெள்ளைவீதி'யையொட்டி 168 குடும்பங்களும் ஆச்சிரம குடியிருப்புத் திட்டத்தில் 81 குடும்பங்களும் 'அடைக்கலகிரி'' குடியிருப்புத்திட்டத்தில் 33 குடும்பங்களும்'' கப்டன் றோய்'' குடியிருப்புத்திட்டத்தில் 57 குடும்பங்களும் தமிழர் புனர்வாழ்வுகழக மாதிரி குடியேற்றத்திட்டத்தின் கீழ் 28 குடும்பங்களுமாக 1616 பேர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மயிலிட்டி, காங்கேசன்துறை, அளவெட்டி பகுதிகளில் இருந்து கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து தங்கியுள்ளவர்கள் தாயக விடுதலைப்போராட்டம் முனைப்புற்று வீறுடன் வளர்ந்து வரும் இன்றைய கால கட்டத்தில் அதனை மழுங்கடித்து அழித்து விடுவதற்கான அனைத்து வழிமுறைகளையும் சிங்கள அரசு கையாண்டு வருகிறது. மிகநுணுக்கமாகத்திட்ட மிடப்பட்டதன் அடிப்படையில் பன்முகப்பட்ட வடிவங்களில் சிங்கள இனவாத அரசு எடுத்து வரும் இந்த அழிப்பு நடவடிக்கை எமது மக்களைப் பல்வேறு வகைகளிலும் பாதிப்பிற்குள்ளாக்கி வருகின்றது: குண்டு வீச்சுக்களாக, இராணுவ படையெடுப்புக்களாக, பொருளாதாரத் தடையாக, கல்விச்சீர்குலைவுகளாக, பண்பாட்டு அழிப்பாக, நில ஆக்கிரமிப்பாக, உளவியல் தாக்கங்களாக, நேரடியான இனப்படுகொலையாக தமிழ்த் தேசிய இனத்துக் கெதிரான சிங்கள அரசின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுள் பொருளாதாரத் தடையானது பல்வேறு கூறுகளைக் கொண்டதாக அமுல்படுத்தப்படுகின்றது. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தடை, எரிபொருட்களுக்கான தடை, மீன்பிடிக்குத்தடை, மின்விநியோகத் தடை என நீளும் இந்தத் தடைப்பட்டியலில் உடல் வளர்ச்சிக்கான போசாக்கு சத்துணவு வகைகளுக்கான தடையும் இடம்பெறுகின்றது. இதன் நோக்கம் பலவீனமான ஒரு இளம்பரம்பரையைத் தமிழீழத்தில் உருவாக்கி விடுவது தான். சிறிலங்கா அரசின் இத்தகைய தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து தமது சாதாரண வாழ்க்கையை ஓட்டிச் செல்ல முடியாத நிலையில் பெரும்பாலான மக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள்தமது தொழில்களை இழந்து, குடும்பத்தின் உழைப்பாளர்களை இழந்து, உழைப்புத்தளங்களை இழந்து அன்றாட வாழ்விற்கு ஏங்கித் தவிக்கின்றனர். இத்தகைய குடும்பங்களால் தங்களது சிறார்களை ஆரோக்கியமாகவும் அறிவுபூர்வமாகவும் வளர்த்தெடுப்பதென்பது இயலாத ஓர் காரியமே.

இத்தகைய சூழ்நிலையிலேயே தமிழீழப் பிரதேசத்தில் இளம் பரம்பரையை சரியான முறையில் வளர்த்து அவர்களுடைய ஆற்றலையும் ஆளுமையையும் மேம்பாடடையச் செய்ய வேண்டிய தேவையும் அவசியமும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் எண்ணத்தில் உதித்தது. அதிலும் குறிப்பாக பின்தங்கிய கிராமப்புறங்களைச் சேர்ந்த நிலையான உறுதியான பொருளாதார அடித்தளமில்லாத வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் முறையாக சத்துணவூட்டப்பட்டு வளர்க்கப்படவேண்டும் என்பது அவரது நீண்டநாள் உணர்வாக இருந்தது. அவரது இந்த தீர்க்க தரிசனமே இன்று நிதர்சனங்களாகியுள்ளன அவரது இத்தகைய சிந்தனைகளின் வெளிப்பாடே ''சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்கா'' என்ற குழந்தைகள் பராமரிப்புநிலையங்களாகும்.

யாழ் குடாநாட்டில் தற்போது சிறுப்பிட்டி, சுன்னாகம் தெற்கு, நாவற்குழி வனிதா குடியிருப்புதிட்டம், கைதடி, உடுப்பிட்டி, யாழ். பொம்மைவெளி, நவாலி கொத்துக்கட்டி, இருபாலை, துன்னாலை தெற்கு ஆகிய ஒன்பது இடங்களில் இந்தச் ''சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்கா'' அமைக்கப் பட்டுள்ளது. இதன் வரிசையில் பத்தாவது பராமரிப்பு பூங்கா விரைவில் கரவெட்டி 'இராஜ' கிராமத்தில் அமைக்கப்படவுள்ளது. இவற்றில் தற்போது ஆறு விடுதலைப் புலிகள் அரசியல் துறையினராலும் மூன்று மகளிர் அமைப்பினராலும் பராமரிக்கப்படுகின்றன. இவை அனைத்துமே முதலாவது ஆண்டு நிறைவை எட்டிய வண்ணமுள்ளன

இவ்வகையில் ஒன்றே சுன்னாகம் தெற்கு சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்காவாகும். இது 12 பரப்புக் காணியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலிலே நிலைய கட்டடம் அமைந்துள்ளது. அதற்குள் சிறுவர்கள் படிப்பதற்கான கூடம், ஓய்வு கூடம், முதலுதவிக் கூடம், அலுவலகம், விரிவுரை மண்டபம் ஆகியவை காணப்படுகின்றன. இங்கு வகுப்பறைகள் மிகவும் அழகிய சித்திரங்களால் வரையப்பட்டு நல்வழிப்படுத்தும் வாசகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. வகுப்பறையில் கற்பித்தலுக்குதவக்கூடிய பல வகையிலான விளையாட்டுச் சாதனங்கள், ஆக்கத் திறனை விருத்தி செய்யக்கூடிய உபகரணங்கள், கணித விஞ்ஞான உபகரணங்கள், சங்கீதக் கருவிகள் ஆகியன காணப்படுகின்றன.

இதன் வடகிழக்குப் பகுதியில் எண்கோண வடிவிலான வேயப்பட்ட அழகிய மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இதற்குள் யாவர் கல்வி கற்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதனைச்சூழ இயற்கை அழகு தரும் வகையில் பூந்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது சிறுவரின் உடல் உள நலனை விருத்தி செய்யவும் உள விருப்புகளுக்கும் தேடலுக்கும் புலக்காட்சித் தேவைக்கும் அமைய இவை அமைக்கப்பட்டுள்ளன. பல இனங்களையும் நிறங்களையும் கொண்டதான இப்பூங்காவானது சிறுவர்களின் அழகுணர் ஆற்றலை மேம்படுத்தும் முகமாக அமைக்கப்பட்டுள்ளது. இவ் இயற்கைச் சூழலானது மாணவர் கற்பதற்கான தூண்டுதலை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வடக்குப் பகுதியில் சமையலறை காணப்படுகிறது. அங்கே கண்ணைக் கவரும் வகையில் சில்வர் பாத்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒரு புறத்தில் இரட்டைச் சூட்டடுப்பு மிகவும் பெரியளவில் அழகாகக் கட்டப்பட்டுள்ளது. மறுபுறத்தில் களஞ்சிய அறை காணப்



படுகிறது. வாசலை அண்டி ஆசிரியர்கள், பணியாளர்கள் உணவுக் கூடம் காணப்படுகிறது.

தெற்குப் புறமாக விளையாட்டரங்கு காணப்படுகிறது. இதனைச் சுற்றிவர மான், புலி, பூனை, யானை சேவல், சிங்கம், மீன் ஆகியவை வரையப்பட்டுள்ளதுடன் குழந்தைகளின் உருவங்களும் வரையப்பட்டு வாசகங்களும் காணப்படுகின்றன. இவை குழந்தைகள் ஒலியெழுப்புவதுபோல் அமைந்துள்ளன இவ் விளையாட்டரங்கின் ஓரங்களில் பறவையகம் ஒன்றும் சிறு பிராணிகளின் கூடமொன்றும் காணப்படுகின்றன. சிறு குருவிகள்: தாரா, புறா, கோழி, கிளி போன்ற பறவைகளும் பத்துவரையான முயல்களும் இங்கு வளர்கின்றன இவற்றின் நடுவே மைதானம் காணப்படுகிறது அங்கே சிறுவர்கள் தாமாகவே விளையாடக்கூடியதாக பாதுகாப்பான முறையில் ஊஞ்சல்கள் சர்க்கீஸ், மற்றும் உடற்பயிற்சிக்கேற்ற சாதனங்கள் ஆகியன பொருத்தப்பட்டுள்ளன.

இவ் விளையாட்டரங்கின் கிழக்கே மேடை ஒன்று காணப்படுகின்றது பூர்த்தியாகாத நிலையில் இருக்கும்இம்மேடையில் இப்பூங்கா ஆரம்பிக்கப்பட்ட தினமான 2-ம் திகதிகளில் மாதந்தோறும் கலை நிகழ்ச்சிகளும் ஒன்று கூடல்களும் இடம்பெறும். சிறார்களின் பெற்றோர் பொது மக்கள் மற்றும் நலன்விரும்பிகள் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வர் இந்நிகழ்வின்போதே குழந்தைகள் வளர்ப்பு, அவர்களின் பராமரிப்பு, அவர்களுக்கான சுகாதார வசதிகள் ஆகியவை குறித்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

தெற்குப்புறமாக பண்ணை ஒன்று காணப்படுகிறது: இதில் பூங்காவின் உணவுத் தேவைக்கான காய்கறிகள், பழங்கள், தானியவகைகள் விளைவிக்கப்படுகின்றன: ஆரம்ப நிலையில் மட்டுமேஉள்ள இப்பண்ணை மேலும் விஸ்தரிக்கப்பட்ட நிறைவான பலனைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

தென் மேற்கில் பால் பண்ணைஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் இருநல்லின மாடுகள் காணப்படுகின்றன: இவற்றிலிருந்து தினமும் எட்டு லீற்றர் பால் பெறப்படுகிறது இவைகாலையில்சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன. மாலையில் பணியாளர்களின் தேவைகளுக்கு எடுக்கப்பட்டபின் எஞ்சியவை சந்தைப்படுத்தப்படுகின்றது.

தினமும் காலை 7 மணிக்கு இச்சிறார்கள் பெற்றோரால் அழைத்து வரப்பட்டு பூங்காவில் ஒப்படைக்கப்பட்டு மாலை 5 மணிக்கு மீண்டும் அவர்களாலேயே அழைத்துச் செல்லப்படுகின்றனர்.ஞாயிற்றுக்கிழமை இவர்களுக்கான ஒய்வு தினமாகவுள்ளது. இந்த இடைவெளியில் தான் இச் சிறுவர்கள் பூங்காவில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர். நீல நிற சீருடை அணிந்து காணப்படும் இச்சிறார்கள் அட்டவணையின் பிரகாரம் அங்குள்ள பணியாளர்களால் பராமரிக்கப்படுகின்றனர். தற்போது 113 சிறார்கள் இங்கு பராமரிக்கப்படுகின்றனர். இவர்களில் 60 ஆண்பிள்ளைகளும் 53 பெண்பிள்ளைகளும் உள்ளனர்.

இவர்களைப்பராமரிப்பதற்கென இரு ஆசிரியர்கள், நிர்வாகி, இருசமையலாளர்கள், பராமரிப்பாளர், பண்ணைப் பராமரிப்பாளர் என ஏழு பணியாளர்கள் அங்கு கடமையாற்றுகின்றனர்.

தினமும் காலை எட்டு மணிக்கு பயற்றம் துவையல், கடலை, கௌபி, பயறு இலைக்கஞ்சி ஆகியவற்றில் ஒன்றும் பத்து மணிக்கு பசுப்பாலும் 12.30க்கு மீன், காய்கறி, இறைச்சி ஆகியவற்றில் ஏதாவது சோற்றுடன் கீரை வகையும் பழமும் வழங்கப்படுகிறது. மூன்று மணிக்கு சவ்வரிசிக்கஞ்சி, முழு அவியல் முட்டை, மரக்கறி சூப் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றும் நான்கு மணிக்கு முக்கூட்டு மா, வழிவடை, நூடில்ஸ், முட்டைமா, றவ்வை, கடலை ஆகியவற்றில் ஒன்றும் வழங்கப்படுகின்றன. இவை தினமும் ஒன்று வீதம் வாரத்தில் மேலுள்ளவை அனைத்தும் நேர அட்டவணையின்படி இப் போசாக்குணவுகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் இவர்களுக்கான கல்வி புகட்டப்படுவதுடன், ஆடல், பாடல்களும் கற்பிக்கப்படுகின்றன. இதன்போது அழும் குழந்தைகளை ஆசிரியர்கள் அரவணைத்துத் தேற்றுவதையும் இனிப்புப் பண்டங்களையும் விளையாட்

(10ஆம் பக்கம் பார்க்க)

**சசிகரன்**

### ஒவ்வொரு சிறுவரினதும் ....

- உடல் வளர்ச்சியுறச் செய்தல்
- பொருளறிவை வளர்ச்சியுறச் செய்தல்
- செயல்திறனை வளர்ச்சியுறச் செய்தல்
- நல்லொழுக்கத்தை வளர்ச்சியுறச் செய்தல்
- சமூகப் பண்புகளை வளர்ச்சியுறச் செய்தல்
- அழகுணர் ஆற்றலை வளர்ச்சியுறச் செய்தல்

இவையே சிறுவர் போசாக்குப் பூங்காவின் குறிக்கோள் என்றார் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி.

# பழசும் புதுசும்

மாற்றான் படையினருக்கு அஞ்சி புற முதுகிட்டு ஓடியபோது முதுகிலே வேல்பட்டு மாய்ந்தான் மகனென சிலர் அறியாமல் உரைத்த வார்த்தைகளைச் செவிமடுத்த வயோதிப தாய் ஒருத்தியின் நிலைமையை காக்கை பாடினியார் என்னும் பெண் புலவர் ஒருவர் பாடினார். இந்தச் செய்தியைக் கேள்வியுற்றதாய் மனக் கொதிப்பு அடைந்தாள். அவ்வாறு புற முதுகிட்டு ஓடி வந்தவன் என்பது உண்மையே ஆயின் அவனுக்கு பாலூட்டிய எனது மார்புகளை அறுத்து எறிவேன் எனச் சபதமிட்டு உருவிய வாளுடன் அவள் போர்க்களத்திற்கு விரைந்தாள். அங்கிருந்த பிணக் குவியல்களுக்கு இடையே தனது புதல்வனைத் தேடினாள். நெஞ்சிலே வேல் ஏந்தி வீரச் சாவைத் தழுவியிருந்த தனது புதல்வனின் சிதைந்த சடலத்தை கண்டு பெற்ற பொழுதிலும் பார்க்க பெரிதும் மகிழ்ச்சி உற்றாள். என்று அப் பாடல் எடுத்தியம்புகிறது. அப் பாடல் வருமாறு அமைகின்றது.

''நரம்பெழுந்துலறிய நிரம்ப மென்தோள்
முளரி மருங்கின் முதியோள்சிறுவன்
படையழிந்து மாறினன் எனப் பலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின்உண்ட
என்
முலை அறுத்திடுவென் யானெனச் சினை
இக்
கொண்ட வாளொடு படுபிணம்பெயரா ச்
செங்களம் துழவுவோள் சிதைந்து
வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றிலும் பெரிது உவந்தனளே'

இந்த நிலைமை இன்றைய தாய்மார் எண்ணிப் பார்க்க வேண்டியது ஒன்றாகும். இன்றைய தாய்மார்கள் மத்தியிலும் பெருவீரர்களைப் பெற்றமைக்காக மகிழ்ச்சியுறுவோர் இருக்கின்றனர் என்பதையும் அத்தகைய தாய் ஒருத்தியின் உணர்ச்சி எவ்வாறு இருக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்த்தபோது இவ்வாறு கூறத் தோன்றுகிறது.

போர்க்களம் தன்னில் முன்னேபோக
அஞ்சினன் உன் மகனென சிலர் உரைத்த
வார்த்தைகள் கேட்டே வெந்து துடித்த
வயோதிப அன்னை உணர்வின்றி
சாய்ந்தாள்!

ஆயினும் என்னே...?
மழையெனப் பொழிந்த ரவையினில்
நனைந்து
சிந்திய குருதியால் நிலம் சேறென
வாகிட
பிழையிலாப் பெரும் மாவீரனாய்
ஆகினான் என்றே
உற்றவர் உரைத்ததால் உயிர்பெற்று
எழுந்தாள்!

- இளையவன்




# இந்திய சினிமா நடிகைகளுடன் கைகுலுக்க டொலரில் பணம் செலவிடும் கனேடிய தமிழர்!

தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவிட வேண்டும் என பாரதி கூறினார். அதனை நனவாக்கும் முயற்சியில் தமிழர்கள் ஈடுபட்டுள்ளார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்று ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, சுவீடன், நோர்வே, கனடா போன்ற நாடுகளில் அதிகளவில் வெளிவருகின்றன. அது மட்டுமல்லாது பல புதிய நாடக, இலக்கிய, இசை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலகின் இரண்டாவது பெரிய நாடான கனடாவில் மொத்தம் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். கனடாவின் பிரதான நகரங்களான வான்கூவர், மொன்றியால், ரொரன்டோ, ஒட்டாவா ஆகியவற்றில் தமிழர்கள் பரந்தளவில் வாழ்கின்றனர். இவற்றில் ரொரன்டோவில் மாத்திரம் சுமார் எழுபதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் பல தமிழர்கள் பேராசிரியர்களாக உள்ளனர். இதில் அநேகமானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். ஹமில்டனில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் பல இலங்கைத் தமிழர் ஆராய்ச்சியாளர்களாகவும், மாணவர்களாகவும் பணி புரிகின்றனர்.

கனடா ஒரு பல்தேசிய இன நாடு ஆகும். எனவே ஒவ்வொரு மொழிப் பிரிவினரும் தமது மொழியை வளர்க்க நிதி உதவி வழங்கப்படுகிறது. ஒரு பாடசாலையில் பதினைந்துக்கு மேற்பட்ட மொழிப் பிரிவினர் இருப்பின் அப்பாடசாலையில் அந்த மொழி கற்பிக்கப்பட வேண்டும். அதே சமயம் ஆங்கிலம் கற்பிப்பதற்காகவும் கனடா அரசாங்கம் பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளது. ரொரன்டோவில் உள்ள ரொரன்டோ நூல் நிலையத்தின் பத்துக்கு மேற்பட்ட கிளைகளில் 100க்கு மேற்பட்ட தமிழ் நூல்கள் உள்ளன. இங்கு தமிழர்களால் நடாத்தப்படும் இரு நூலகங்களும் உண்டு. ஒன்று அரசாங்க உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இல்லத் தொடரில் அமைந்துள்ள நூலகம். இதனை இலங்கையின் முன்னாள் கல்லூரி அதிபர் பொறுப்பெடுத்து நடத்துகிறார். இந்த நூலகம் பரந்துபட்ட வாசகர்களுக்கான நூல்களைக் கொண்டுள்ளது. இரண்டாவது 'தேடகம்'' - தமிழர் வகைதுறை வளநிலையத்தினரின் நூலகம் இது. புலம்பெயர்ந்த பல இளைஞர்களின் முயற்சி இது. தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதியில் அமைந்துள்ள இந்த நூலகத்தில் பல சிறு சஞ்சிகைகள் உட்பட பல புதிய நூல்களை இங்கு காணலாம். இவ்இளைஞர்கள் இங்கு அகதிநிலை அந்தஸ்து பெற்று வாழ்கின்றனர். இவர்கள் கனடிய வாழ்வைச் சீமை வாழ்வாகப் பார்க்கவில்லை. சீரிய பார்வையுடன் நோக்கும் இவர்கள் நிறவெறி ஏகாதிபத்திய வெறித்தனம் என்பவற்றுக்கு எதிராகக் கனடாவிலும் குரல் கொடுக்கின்றனர்.

இவ் இளைஞர் குழாம் இரண்டு கலை நிகழ்வுகளை அளித்துள்ளது. வசந்த காலத்தில் வந்து குவியும் இந்திய பின்னணிப் பாடகர்கள், நடிகர்கள் நடிகைகளின் நிகழ்ச்சிகள் வாரா வாரம் ரொரன்டோ, மொன்றியல் நகர மேடைகளை அலங்கரிக்கின்றன. இந்திய சினிமா ஆதிக்கம் அங்கு வளர்கிறது.

ஜேர்மனியில் நடைபெற்ற சினிமா இரவு நிகழ்ச்சியில் அமலாவுடன் கைகுலுக்க தனியாகக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டன. அதேபோன்று அண்மையில் கனடா வந்த பானுப்பிரியாவைச் சந்தித்து பேச 100 டொலர். இங்கு வார நாட்களில் வானொலி நிகழ்ச்சிகள் ஒரு மணி நேரத்திலிருந்து இரண்டு மணிநேரம் வரை நடைபெறுகின்றன. இவையும் சினிமாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவில்லை. இவ்வளவுக்கும் மத்தியில் அடுத்த இரு தலைமுறைகளுக்குப் பின்னர் தமிழ் தழைக்குமா என்றால் கேள்விக்குறியே.

1983 யூலை இனக்கலவரத்தின் பின்னர் கொழும்பிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் சென்ற சிலருக்கு வடக்கு கிழக்கில் சொத்து எதுவும் இருக்கவில்லை. அதேபோன்ற ஒரு நிலைமை வட அமெரிக்காவில் உள்ள தமிழருக்கு ஏற்படலாம். வட அமெரிக்காவிலுள்ள 'NAFTA' எனப்படும் புதிய சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் ஐரோப்பிய ஐக்கிய சுதந்திர வர்த்தக வலயம் என்பன புதிய குடிவரவாளர்களை மிகவும் பாதிக்கும்.

இப்பொழுது இங்கு தோன்றியுள்ள பொருளாதார மந்த நிலை பெருமளவில் புதிய குடிவரவாளர்களையும், கறுப்பு நிறத்தவர்களையும் (ஆசியர்கள் உட்பட) பெருமளவு பாதிக்கிறது. இந்தியர்களில் பலர் தாங்கள் கறுப்பரல்ல என்ற மனோபாவத்துடன் கறுப்பு இனத்தவர் பிரச்சினையில் எதிராகச்செயல்படும் தன்மை காணப்படுகிறது.

கனடாவில் பிறந்து வளரும் பிள்ளைக்கு தமிழ், கலாசாரம் என்பனவற்றின் தேவை குறைவாக இருக்கலாம். பொருளாதார மாற்றம், நவீன தொழில்நுட்பம் என்பன மீண்டும் எம்மை எம்மண் நோக்கித் தள்ளும்போது அதன் அவசியத்தை உணர வேண்டி வரும்.

# நோய்களுக்கு அருமருந்தாக இசை மருத்துவ துறையில் புதிய அறிமுகம்

நல்ல இசையைக் கேட்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்த ஆராய்ச்சிகள் பலகாலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இசைமூலம் பயிர்களின் வளர்ச்சியையும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கமுடியும் என ஆராய்ச்சிகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

'இசை நோயாளிகளுக்கு நல்லது செய்யும்' என்கின்ற உண்மையை சமீபகால மருத்துவ ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. அமெரிக்க மாநில மொன்றில் அறுவைச் சிகிச்சையின் போது நோயாளியும் அறுவைச்சிகிச்சை நிபுணர்களும் இசையை அனுபவித்தவாறே மேற்கொண்ட சிகிச்சை வெற்றியளித்ததாகக் கூறப்படுகிறது.

''இசை நோயின் போது ஏற்படும் கடுமையான சிக்கல்களைத் தவிர்க்க உதவுகிறது. நோயாளியின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. அவர்களை ஆஸ்பத்திரியில் அதிகநாள் தங்குவதற்கு வேண்டிய அவசியமில்லாமல் செய்துவிடுகிறது'' என்கிறார் நியூயோர்க் பல்கலைக்கழக மருத்துவமைய இயக்குனர் டாக்டர் மத்யூ லீகடுமையான தலைவலியிலிருந்து நிவாரணம் பெற இசையைப் பயன்படுத்துகிறார்கள்.

குறைந்த காலத்தில் பிரசவமாகின்ற குழந்தைகளை விரைவில் எடை அதிகரிக்கச் செய்யவும் இசை பயன்படுகிறது. இதற்காக குரல்களையும், கருவறையில் ஏற்படுகின்ற ஓசைகளையும் பதிவு செய்து தினமும் குறைந்தது ஒன்றரைமணிநேரம் கேட்க வைப்பது அத்தகைய குழந்தைக்குப் பயனளிப்பதாக அமைகிறது.

அவசர சிகிச்சைப் பிரிவில் அரைமணிநேரம் இசை ஒலிப்பது 10 மி.கிராம் தூக்க மருந்து கொடுப்பதற்குச் சமம் தூக்கமில்லாது அவதிப்படும் நோயாளிகளை இசை மூலம் ஆழ்ந்து உறக்கம் பெறச் செய்யலாம் என நிபுணர்கள் கூறுகின்றனர்,

இசையானஇரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றது தேகத்தின் அடிப்படை இரசாயன மாறுதலை, சுவாச விகிதத்தை மிதப்படுத்தி மன இறுக்கத்தைக் குறைக்கிறது உடலிலுள்ள இயற்கை வலி நிவாரணிகளின் உற்பத்தியை அதிகரிக்கிறது.

இவ்வாறுஉடலில் தோன்றும் மிக முக்கிய கோளாறுகளை நிவர்த்தி செய்ய இசை பயன் படுகிறது. இசையின் மருத்துவ பயன்கள் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் நிறுவனங்கள் உள்ளன இவற்றை விரிவான முறையில் நடைமுறைப்படுத்திப்பார்க்க வேண்டும்.

11-வது எவற்றுப் போத்தல் பரிசு
குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர்
இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 519 | 3762 | 4201 | 4771 |
| 520 | 3763 | 4203 | 5201 |
| 1831 | 3766 | 4254 | 5208 |
| 1973 | 3768 | 4255 | 5223 |
| 2145 | 3919 | 4413 | 5327 |
| 2520 | 3920 | 4455 | 5331 |
| 2525 | 3923 | 4622 | 5349 |
| 2611 | 4057 | 4765 | 5451 |
| 3232 | 4126 | 4766 | 5458 |
| 8237 | 4153 | 4770 | 5467 |

12-வது போட்டியில் இன்றே பங்கு பற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள்:

TASTE LINE INDUSTRIES (PVT) LTD
14, Seenier Lane Jaffna
(சி-8817)

# விளங்காப் பொருளாகிவிட்ட அல்ஜீரிய சனநாயகம்

**பாலகுமாரன்**

எவருமே எதிர்பார்த்திருக்காத மாற்றங்கள் நடைபெறும் நாடுகளின் வரிசையில் இப்போது அல்ஜீரியாவும் இடம்பிடித்துக் கொள்கின்றது; அங்கு இப்போது மேற்குலக ஆதரவோடு மேலைத்தேய பாணியில் ஒரு நவீன சனநாயகக் குடியரசொன்றை அமைக்கப் போவதாக கூறிக் கொள்ளும் ஆளும் அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் குழு ஒருபுறம்; இதற்கு முற்றிலும்மாறாக இசுலாமியப் பண்பினைக் கொண்ட குடியரசு ஒன்றினை அமைக்கப் போவதாக கூறிப் போராடும் இசுலாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் மறுபுறம் உள்ளன. எனவே இவர்கட்கிடையிலே இன்று நடைபெறும் கடும் மோதல்களின் விளைவு என்னவாகும் என்பதே இன்று உலகம் அறிய காத்துக்கிடக்கின்றது; ஏனென்றால் 1979ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்டது போன்று இங்கும் மாற்றம் ஏற்பட்டால் அதன் விளைவுகள் வட ஆபிரிக்காவில் மட்டுமல்ல ஐரோப்பாவிலும் எதிரொலிக்கும், ஏனென்றால் பிரான்சின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்காக இலட்சக்கணக்கான மக்களைப் பறிகொடுத்து 1962ம் ஆண்டில் விடுதலை பெற்று சோசலிச ஆட்சி முறைமையொன்றை ஆபிரிக்க இசுலாமிய நாடொன்றில் ஏற்படுத்தும் முன்னோடியாக திகழ்ந்து இன்று இசுலாமிய அடிப்படை வாதம் மேலோங்கும் அல்ஜீரியாவின் எதிர்காலம் பல வினாக்களை இன்று உலக அரசியல் அரங்கில் புயலாக எழுப்பி விட்டுள்ளது.

இப்போது என்னதான் அங்கு நடக்கிறது? அங்குள்ள இசுலாமிய மத அடிப்படைவாத அமைப்புக்களின் முன்னணியான இஸ்லாமிய மீட்பு முன்னணி (FIS-Islamic Salvation Front) நாட்டை விட்டு வெளியேறாத வெளிநாட்டவர் கொல்லப்படுவர் என அறிவித்ததின் பின் இதுவரை 27பேர் வரை கொல்லப்பட்டு விட்டனர். இக்கொலைகட்கு மேற்குலக வெறுப்பு மட்டுமல்ல காரணம் அல்ஜீரிய எண்ணெய் நிறுவனங்கள் பிறநாட்டவர்கையிலிருப்பதும் இவர்களே அங்கு கூடுதலாக பணிபுரிவதும் பிறகாரணங்கள். அல்ஜீரிய முசுலிம் ஆண் பெண்ணை மணமுடித்த பிறதேசத்தவரும் இப்போது கொல்லப்படுகின்றனர். 1992ம் ஆண்டுசனநாயகரீதியில்முதன் முறையாக நடாத்தப்பட்ட தேர்தலில்மா பெரும் வெற்றியடையும் நிலையில் தடை செய்யப்பட்ட இசுலாமிய மீட்பு முன்னணி தனதுபோராட்டத்தை தீவிரப்படுத்தியது இற்றை வரை எல்லாத் தரப்பிலுமாக 3000- 35000 பேர்வரை பலியாகிவிட்டதாக- இப்போது நாளாந்தம் 15பேர்வரை பலியாவதாக மதிப்பீடுகள் மதிப்பிடுகின்றன. இப்போது இசுலாமிய மீட்பு முன்னணியின் இரு பிரதான அமைப்புகளான 'GIA' எனப்படும் (The Armed Islamic Group குழுவும் 'MIA' எனப்படும் The Armed Islamic Movement) குழுவும் மேற்கொள்ளும் முனைப்பான போராட்டம் அல்ஜீரியஅரசை பெரும் இக்கட்டுக்குள் இன்று தள்ளிவிட்டது. வறுமையின் பிடியில் வாழும் கிராமப்புறங்கள், புறநகரங்கள், சேரிப் புறங்களில் தளம் அமைத்து போரிடும் இக்குழுக்கள்இப்போது தலைநகருக்குள்ளும் ஊடுருவி விட்டன. தமதுமண்ணின்பண்பை ஓரங்கட்டும் என இவர்கள் கருதும் மேற்கத்தைய இசை நாடாக்கள், வீடியோ படங்கள்,தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் இப்போது தலைநகருக்குள்ளும் தடை செய்யப்பட்டு விட்டன நகரின் சுத்திகரிப்பு பணி தடைப்பட்டதால் குப்பை கூழங்கள் நிரம்பி வழிகின்றன. இரவில் போலியான வீதித்தடைகளை காவல்துறையினர் போல் உடையணிந்த இசுலாமிய போராளிகள் இடுவதால் எவரும் இரவில் வெளிக்கிளம்ப துணிவதில்லை. உணவுக்காக ஏழைகள் வரிசைகளில் தவம் கிடக்கின்றார்கள். கடந்த இரண்டு வருடங்களாக அல்ஜீரியா வாழ்க்கை என்பது பயங்கர கனவொன்றை ஒத்தது என்கிறது மனித உரிமை காப்பு இயக்கமான (Middle East Watch) மத்தியகிழக்கு தொடர்பான மனித உரிமை அமைப்பு.

வெளியுலகம் என்னதான் அடிப்படைவாதிகள்எனக்கண்டனம் செய்தாலும் இசுலாமிய அடிப்படை வாத போராளிகளை பொறுத்தவரை அவர்கள் தமது தேசிய பண்பினை சிதைக்க முனைந்த மேற்கத்தைய ஏகாதிபத்தியர்கட்கு எதிரான தமது முன்னைய விடுதலைப் போரின் தொடர்ச்சியாகவே இப்போதைய போராட்டத்தை உருவகப்படுத்துகின்றனர். முன்னர் பிரான்சின் கொடுங்கோண்மை ஆதிக்கத்திற்கு எதிராக போராடி தாம் 1962இல் பெற்ற விடுதலையின் இலக்குகள் இன்னமும் அடையப்படாமையாலே இப்போது தாம் இரண்டாவது போரை' நடத்துவதாக இசுலாமிய மீட்பு முன்னணியின் தலைவரும் தற்போது ஜேர்மனியில் நாடு கடந்து வாழ்பவருமான றபா கபீர் (Rabah Kebir) கூறுகின்றார். 1954ம் ஆண்டு தொடங்கி 8 வருடங்கள் நீடித்த விடுதலைப் போரில் பிரான்சியரின் சொல்லமுடியா சித்திரவதைகட்கு மத்தியிலும் எந்த இசுலாமியப் பண்பைக்காப்பாற்ற இலட்சக்கணக்கானோர் தமது உயிரை விலை கொடுத்து போராடியது போலவே, இப்போதும் அதே பண்பைக் காப்பாற்ற போராடுவதாகவே இவர்கள் கூறிக் கொள்கின்றார்கள். முன்னர் பிரான்சுக்கு எதிரான விடுதலைப் போரின் போது செயற்பட்டது போலவே வெளிநாடுகளில் அரசியல் ரீதியாக, இராசதந்திர அடிப்படையிலும் உள்நாட்டில் நிதி திரட்டி ஆயுதம் சேகரித்து, வாலிபர்களைத் திரட்டி பயிற்றுவித்துமுனைப்புடன் போராடுகின்றனர். இன்றைய போராட்டத்தின் கதாநாயகர்களாக இவர்கள் தமது விடுதலைப் போராட்ட வீரர்களையே வரித்துக் கொள்கின்றனர். 1950களில் பிரான்சியர்க்கு எதிராக போராடிய முஸ்தபா பௌயாலி(MustaphaBouyali) என்பவரே 1982-ம் ஆண்டளவில் அல்ஜீரிய அரசுக்கு எதிராக இசுலாமிய அடிப்படைவாத அமைப்பினை ஆரம்பித்தார். இவர் 1987இல் கொல்லப்பட்டாலும் இவரது தளபதிகளில் ஒருவரான அப்துல் காதர் சிபூட்டியே (Chebouti) MIA இயக்கத்திற்கு இப்போது தலைமை தாங்குகிறார். இப்போது கல்வி கற்று வேலையற்று சினத்துடனும் விரகதியுடனும் அலையும் அல்ஜீரியாவின் புதிய இளைய தலைமுறை முற்றாகவே தம்மை இப் போராட்ட அமைப்புக்களுடன் ஈடுபடுத்துவது தலைமுறை இடைவெளியொன்றையும் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகின்றது. அனேகமான போராளிகள் 15--20 வயதிற்கு இடைப்பட்டவர்களே. GIA அமைப்பின் தளபதி 25 வயதினர். சிறையிலிருக்கும் இசுலாமிய மீட்பு முன்னணியின் இரு தலைவர்களில் அபாதி மதானியை (Madiari)தவிர அலி பெலபடிச் (Ali Belbadni) 37 வயதுடையவர். அல்ஜீரியாவின் சனத்தொகையில் பெரும் பங்கினர் 30 வயதிற்கு உட்பட்டவரே.

இப்போது அல்ஜீரியா ஒரு பெரும் புயலாக வினாவொன்றை உலக அரங்கிலே கிளப்பிவிட்டுள்ளது, ஏனென்றால் அங்கு 25 வருட காலத்திற்கு மேலாக நடைபெற்ற ஒரு கட்சி முறைமை 1988ன் பின் இல்லாது ஒழிக்கப்பட்டு இசுலாமிய கட்சிகள் உட்பட சகல கட்சிகளும் தேர்தலில பங்குபற்றத்தக்க வகையில் சனநாயக மாற்றங்களை

அப்போதைய சனாதிபதி சட்லி பெண்டிநிட் (Chadli Bendjedid) செய்தபோது மேற்குலகம் வரவேற்றது ஆனால் 1991-ம் ஆண்டு புதிய ஆட்சியொன்றை அமைப்பதற்காக நடைபெற்ற பொதுத் தேர்தலில் இசுலாமிய மீட்பு முன்னணி தான் போட்டியிட்ட 228 தொகுதிகளில் 188 ஐ கைப்பற்றியபோது அல்ஜீரியா எங்கு செல்கின்றது என்பது எல்லார்க்கும் புரிந்தது. இசுலாமிய கட்சிகள் தேர்தலில் பங்குபற்றத் தக்க வகையில் முன்னைய தடைகளை நீக்கியமைக்காக சனாதிபதி மேற்குலகால் கண்டிக்கப்பட்டார். தேர்தல் முடிவுகள் இடைநிறுத்தப்பட்டன. சில கால குழப்பத்தின் பின் மேற்குலக ஆசியோடு இராணுவம் 1992 சனவரியில் சனாதிபதியைபதவி நீக்கிதேர்தலையேஇரத்துச் செய்தது இதன் பின்னே நிலைமைகள் மிகவேகமாகமோசம் அடைந்தன, ஆட்சி ஆதிக்கத்தை முன்னாள் இராணுவத்தின் உளவுப் பிரிவினர் சிலர் தமது கையிலெடுத்து தமதெண்ணப்படிஆட்சி நடாத்தவே மக்கள் வெறுப்பு உச்சத்திற்கு போய்விட்டது, புதிய மாற்றங்களை எதிர்பார்த்த மக்களுக்கு அடக்குமுறையும் ஊழலும் நிரம்பி வழியும் ஒரு மோசமான அதிகார வெறிபிடித்த கும்பலே பரிசாகியது அங்கு இவ்வாட்சி மாபியா கும்பலொன்று போன்றதாகவே கருதப்படுகின்றது. இப்போது மேற்குலகம் வெளிப்படையாக கட்சி மாற்றத்தை மெல்லியதாக கண்டித்தாலும் உள்ளுக்குள் மகிழ்ந்து இவ்வாட்சிக்கு பூரண ஆதரவினை வழங்குவது இசுலாமிய அடிப்படைவாதிகட்கு தம்மை நியாயப்படுத்த மேலும் வசதியாகி விட்டது. எனவே தான் எது சனநாயகம் என்கிற கேள்விக்கு இன்று விடை சொல்ல அங்கு யாருமில்லை ஆனால் அமெரிக்க நிருவாகமோ சனநாயகம் இல்லையென முசுலிம் அடிப்படைவாதிகள் கூறுவது சனநாயகத்தை குழிதோண்டிப் புதைப்பதற்கே என எச்சரிக்கைக் குரல் எழுப்புகின்றது.

ஆனால் புதிதாக ஆட்சி அதிகாரத்தை கையிலெடுத்த குழுவோ அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு இசுலாமிய அமைப்புக்களை தடை செய்து தலைவர்களை சிறையிலிட்டு இரகசிய கொலைக் குழுக்களை உருவாக்கி ஆயிரக்கணக்கில் முசுலிம் வாலிபர்களை சகாராபாலைவனத்தில் சிறையிலிட்டு வாட்டி வதைக்கின்றது. விளைவு இசுலாமிய அடிப்படைவாதம் புதிய முனைப்புடன் தனது எதிர்த்தாக்குதலை மேற்கொள்கின்றது.

இங்கு அல்ஜீரிய மக்கள் படும்பாடே கவனிக்கப்பட வேண்டியதாகின்றது; சீரழியும் பொருண்மியம் எண்ணெய் விலை வீழ்ச்சியால் ஏற்கனவே நலிந்த நிலையில் பணவீக்கம் வேகமாக அதிகரிக்க வேலையின்மை என்பது கொடும்தொற்றுநோய்போல் பரவ--மக்கள் வறுமையில் வாடுகின்றனர்; உணவுத் தானியத்தில் 50 விழுக்காடு இறக்குமதியாக்கப்பட வேண்டிய நிலையில்-உள்ள தொழிற்சாலைகளும், 50 விழுக்காடு உற்பத்தியை மட்டும் செய்யும் நிலையில் இயங்கவே மக்கள் தமது விடிவிற்காக இசுலாமிய போராளிகள் பக்கமே தள்ளப் படுகின்றனர். எனவே எகிப்தைப் போலவே இங்கும் சமூக முரண்பாடுகள் அதிகரிக்க மேற்கத்தைய வெறுப்பு கொழுந்துவிட் டெரிகின்றது. எனவே இப்போது வறுமை நிரம்பிய கிராமப்புறங்கள் ஏழ்மை தாண்டவமாடும் சேரிப்புறங்கள் புறநகரங்கள் இசுலாமிய அடிப்படைவாதம் விளையும் விளைநிலங்களாகி விட்டன.

எனவே மோசமடையும் இந்நிலையைத் தடுக்கும் முகமாக அல்ஜீரியா ஆட்சிக்குழு இறங்கி வந்து சில போராளிகளை விடுவித்து தேசிய இணக்க மாநாடொன்றிற்கு வருமாறு விடுத்த அழைப்பும் தமது இரு தலைவர்களையும் சிறையிலிருந்து விடுவித்தாலே பங்குபற்ற முடியும் என்கிற மீட்பு முன்னணியின் பதிலால் பயனற்றதாகிவிட்டது. எனினும் தொடர்ந்து பேச்சுக்கள் நடாத்த முயலப்படுகின்றது அதே சமயம் இசுலாமிய மீட்பு முன்னணிக்குள்ளும் பிளவுகள் இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் எது எப்படி இருந்த போதும் அல்ஜீரியாவில் இசுலாமிய அடிப்படை வாதிகள் வெற்றிபெறுவது தவிர்க்கமுடியாத நிகழ்வாகப்போகின்றது என்றே விசயமறிந்த பிரான்சிய ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். இத்தகையதோர் மாற்றம் வட ஆபிரிக்காவில் மொரக்கோ,ரியூனிஸ், லிபியா குறிப்பாக எகிப்திலும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஐரோப்பாவில் முசுலிம் மக்கள் தொகை அதிகரித்துள்ள இடங்களிலும் குழப்பங்கள்ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் ஏற்கனவே பல தொல்லைகளில் சிக்கியுள்ளதாலும் அல்ஜீரியாவில் தற்போதைய விசித்திர நிலையும் அங்கு மேற்குலகை எவ்விதம்' தலையிடுவதென தயங்கும் நிலையிலே வைத்திருக்கின்றது.

எனவேதான் பிரான்சிய உயர்அதிகாரிஒருவர் குறிப்பிட்டது போல் 'இப்போது அல்ஜீரியாவில் எவர்கையில் அதிகாரம் இருக்கின்றதென்பதேதெரியவில்லை, நாட்டை முற்று முழுதாக சீரழித்ததற்போதைய ஆட்சியாளர் மேல் எமக்குஅனுதாபம்கிடையாது ஆனால் நாம் யாரை தெரிவு செய்வது? மோசமான பிளேக் நோயையா அல்லது வாந்திபேதி நோயையா எதை நாம் தேர்வு செய்யமுடியும்''என்கிறார். இவ்வாறாக எது சனநாயகம் என்றே தெரியாத ஒருவிசித்திர நிலையில் அல்ஜீரியா தொடர்பாக மேற்குலகம் குழம்புகின்றது, எனவே தற்போது சிறையில் இருக்கும் அலிபெலடிச் கூறியது போல் ''அடிமை (இசுலாமிய உலகம்) ஆண்டானை (மேற்குலகம்) எதிர்க்கும் காலம் என்று வரும்? ஈராக்கில், சோமாலியாவில், லிபியாவில், பொசுனியாவில் போரிடும் சகோதரர்க்கு நாம் உதவும் காலம் என்று வரும்? இப்போது இசுலாமியப் போராளிகள் இக்காலம் விரைவில் வருமென்றே நம்பி காத்திருக்கிறார்கள், இதுவே இன்றைய அல்ஜீரிய அவதியாகின்றது-


## முக்கிய அறிவித்தல்

### இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

சாவகச்சேரிப் பிரிவு

### பொதுக் கூட்டம்/ புதிய நிர்வாகக் குழு தெரிவு

காலம்:- 27-03-1994 ஞாயிறு காலை 10-00 மணி
இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபம்

எமது பிரிவின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழு தெரிவும் மேற்படி திகதியில் நடைபெறும்; கௌரவ நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பதவிக்கும், தேர்தலில் வாக்களிக்கவும் 12-02-1994க்கு முன் 1994 ஆம் ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம் செலுத்தியோர் தகைமையுடையோராவர்.

06-03-1994இல் இருந்து 12-03-1994 வரை தேர்தலுக்கான வேட்புமனுப் பத்திரம் விநியோகிக்கப் படும். 13-03-1994 இல பூர்த்தி செய்யப்பட்ட வேட்பு மனுப்பத்திரம் (விலை ரூபா 10|-) ஏற்றுக் கொள்ளப்படும்.

15-03-1994 இல் விரும்புவோர் தங்கள் வேட்புமனு விண்ணப்பத்தை வாபஸ் வாங்க முடியும் (பெற) கௌரவ நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கவனத்திற்கெடுத்துச் செயற்படவும்.

சகல அங்கத்தவர்களும் 27-03-1994இல் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து தங்களின் முக்கிய பங்களிப்பைச் செலுத்துமாறு வேண்டுகின்றோம்,

செஞ்சிலுவைசேவையிலுள்ள
வீ. பி. தியாகராஜா
கௌரவ செயலாளர்
சாவகச்சேரிப் பிரிவு

(7697)

# சிறுகதை

# "முடிவிற்கு அப்பால்....."

## குருநகர் யோகி

"தோழா, நீ எனக்கு முக்கியமான உதவி ஒன்று செய்ய வேண்டும்"- இப்படிக் கேட்டது எனது அலுவலக நண்பன்.

"என்ன மச்சான் சொல்லு என்ன செய்ய வேண்டும்?"

"ஒரு முக்கியமானதும், இரகசியமானதுமானவிடயம்- நாம் வெளியே போய் நின்று கதைப்போம்."

அலுவலகத்துக்கு வெளியே நின்ற ஆலமர நிழலில் நானும் அவனும். வீதியால் பலர் போய் வந்து கொண்டிருந்தனர்.

சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொள்ளுகின்றேன்- நண்பனும் முன்பு நன்றாக "ட்றிங்ஸ்" எடுத்தவன்- 'செயின் ஸ்மோக்கர்' என்று பெயரெடுத்தவனும் கூட. ஆனா கடந்த மூன்று வருடங்களாக அவனில் ஒரு மாற்றம்: இப்படியான தீய பழககங்களை விட்டு விட்டான்-

யானதைக் கேட்டுச் செய்" என்றேன்;

ஃ ஃ

ஒரு ஞாயிற்றுக்கிழமை- வேலையும் இல்லை. புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது அந்த புதிய நண்பர் வருகிறார். "மகேந்திரன்" என்று தொடங்கி முடிவதற்கு முன்,

"உங்களுக்கு என்ன உதவி தேவையோ, சொல்லுங்கள்" என்றேன்.

அவர் மென்மையாகச் சிரித்துவிட்டு கேற்றுக்கு வெளியே நின்ற இரண்டு நண்பர்களை அழைத்தார். அவர்கள் வயதில்குறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

"இவர்கள்இருவரும்இங்கே இருக்கட்டும், நான் வந்து கூட்டிப்போகும் வரை'; - அவர் போய்விட்டார். தேநீர் கொடுக்கும் போது கூட கூச்சத்துடனேயே வாங்கின்றன

"தம்பியவை கைகளைக் கழுவுங்க சாப்பிடலாம்" அவர்கள் கை கழுவிவிட்டு திரும்ப எப்படித்தான் ஸ்டீபன் வந்தாரோ??

"அண்ணா 2சாரம் இருந்தாக் கொடுங்க' நான் எடுத்துக் கொடுக்க

'கெதியா உடுப்பு மாற்றுங்க'

அவர்கள் சாப்பாட்டை மறந்து ஸ்டீபன் கட்டளைக்குப் பணிந்தார்கள்

"ஸ்டீபன் அண்ணே! அவர்கள் சாப்பிட்டுவிட்டு வெளிக்கிடட்டுமே"

"குறை எண்ண வேண்டாம் அவசரமாகப் போகவதற்கான பயிற்சி பெறப் போகிறார்கள்"

"அப்படியானால்இவாகள் -...... இவர்கள் இயக்கமோ? என் மனைவியின் முகத்தில் பயத்தின்சாயை.

"ஏனப்பாபயப்படுகிறாய்? எல்லோரும்பயந்துபயந்துஒதுங்கிக் கொள்வதால்தான் நமது இனம் முறைக்கு முறை அழிக்கப்பட்டு வருகிறது. அநுராதபுரம் வந்துவிட்டால் அடங்கிப் போகிறோம்,இந்த அவல நிலையை இன்னும் எத்தனை காலத்திற்கு நீடிக்க விடுவது, நாம் அழிந்தாலும் நமது சந்ததியாவது விடுதலைக் காற்றை சுதந்திரமாக சுவாசிக்க வேண்டும்: இதற்கான பங்களிப்பை நாமும் செய்ய வேண்டும்"

"கை" தட்டல் பலமாகக் கேட்டது. "அற்புதம் அபாரம்: திறமையான பேச்சாளராகி விட்டீர்கள். ஆனா பேச்சோட நின்று கொள்ளுங்கள் செயலில் இறங்கி-

மணலில் குடும்பமாக பால்குளம்: குரங்குக்குளம், வாய்க்கால் போய் முழுகுவதும், சாப்பிடுவதுமாக ஏழெட்டு நாட்கள் ஒரே சந்தோசமாகவே இருக்கும். இரவில் பனை ஓலை கொழுத்தி கிளித்தட்டு, வார்கொடுத்து ஓடி விளையாடுவது கண்கொள்ளாக் காட்சி. கோவில் என்பதை விட பொழுது போக்கையே விரும்புவோர் பலர்.

"நான் போய் ஒரு சின்ன 'ட்றிங்' எடுத்துவிட்டு வாறன்' நேரமிருக்குத் தானே?"

"உங்களுக்கு கோயில் குளத்துக்கு வெளிக்கிடேக்கையும் இந்த நினைப்புத்தான்- உங்களை மாற்றவே முடியாது-" நான் போய்விட்டேன்-

ஃ ஃ

"என்னப்பா சொல்கிறாய்? விளக்கமாகச் சொல்" - என் குரலில் பதற்றம். சாடையாக என் 'கிக்' குறைகிறது-

"நீங்க போன கையோடு இரண்டு பெடியன்கள் வந்தார்கள்- ஸ்டீபன் அண்ணனை பொலிசார் சுட்டு இறந்து விட்டாராம்- வாறதாக இருந்தால். இடத்திற்கு வரட்டுமாம்-"

"என்னப்பா நம்ப முடியவில்லையே? யாராவது .. இப்ப என்ன செய்யிறது நான் போய் பார்த்திட்டு வரட்டுமாம்

"என்னப்பா" எல்லோரும் வந்து விட்டார்கள்- இந்த நேரத்தில் நீங்க போனா?

மனதுக்குள்ளே ஸ்டீபனிடன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வானில் ஏறினேன்-

புல்லா வெளிப் பயணம் வழமைபோல் ரசிக்கவில்லை- ஸ்டீபனின் மரணம் .. சகிக்க முடியாததாக இருந்தது-

ஃ ஃ

"என்ன மச்சான் ஸ்டீபனை கொன்று விட்டார்களாமே?"- மெதுவாக மகேந்திரனிடம் கேடடேன்-

ஓம் மச்சான் கோவில் பிரச்சினை ஒன்றை தீர்த்து வைக்கப்போயிருக்கிறார்- நாய்கள் யாரோ துப்புக் கொடுக்க சிவில் உடையில் வந்த அவர்கள் கடைக்குள் மறைந்திருந்து சுட்டு விட்டார்கள்-"

ஏன் ஸ்டீபனும் தேடப்பட்டவரா?"

இதென்ன கேள்வியாடா?'

(8ஆம் பக்கம் பார்க்க)

"உன்னடவீட்டில சிலநண்பர்களை கொஞ்ச நாளைக்கு வைத்திருக்க வேணும்- முடியுமா உன்னால்...?"

"இதிலென்ன கஷ்டம்- நாங்க சாப்பிடுகிற சாப்பாட்டோட 2பேணி அரிசி கூட போட்டாப் போதும்-"

"அவர்கள் உன் வீட்டில் இருப்பது பற்றி அயல் அட்டத்துக்கு தெரியக் கூடாது"

"டேய் என்ர வீட்டில என்னைத் தேடி எத்தனை நண்பர்கள் வருகிறார்கள், தங்குகிறார்கள் தெரியும் தானே? எத்தனை 'பார்ட்டி' நடந்திருக்கும்? குடிக்கிறவன் என்றாலும் மரியாதையுள்ளவன் என்ற பெயர் இருக்கிறது."

"அதனால் தான்உன்னடவீட்டில இடம் கேட்டேன்- யாரும் சந்தேகப்பட இடமில்லை-குடிகாரருக்கும்அவர்களுக்கும் வெகு தூரம்"

சந்தேகம்- குடிகாரரர்-அவர்கள், எனது மூளையைக் குழப்பிக் கொள்ளுகின்றேன்-

"என்ன யோசிக்கிறாய்?"

"ஒன்றுமில்லை: அவர்கள் எப்பொழுது வருவார்கள்"

"எனதுபெயரைச் சொல்லி ஒருவர் உன்னைச் சந்திப்பார் பிறகு அவரே விபரம் கூறுவார"

எமது பேச்சுக்கள் முடிவடைந்தன, மீண்டும் அலுவலகத்தினுள் சென்று எமது வேலைகளைத் தொடங்குகின்றோம்.

பி-ப-5-00 மணி-வழமைப் பிரகாரம் எனது மற்ற நண்பர்களுடன் பஞ்சன்ர பாரில் குடித்து விட்டு, விடை பெற்று சைக்கிளில் ஏறினேன். என்னதான் வெறியாக இருந்தாலும் சைக்கிளில் ஏறி விட்டால் சைக்கிள் நேரே வீட்டில போய்த்தான் நிற்கும்- இடையில் விழுந்து எழும்புவது கிடையாது.

"என்னது றோட்டால ஓடி வரேக்க, ஒன்றுமில்ல. வீட்டு வாசலுக்க வந்த உடன்தான் ஒரு புழுகு ஆட்டம்" என் மனைவி-

"அப்ப றோட்டில விழுந்து கிடக்கச் சொல்லுறியா? நாங்க ஜென்ரில்மென் குடிகாரர்: குடிச்சாலும் நிதானத்தை இழக்கமாட்டோம்"

எனது பிள்ளைகள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்- அவர்களுக்குத்தெரியும் அப்பா ஏதாவது கொண்டு வந்திருப்பாரென்று-கொண்டு வருவதற்கு நானும் மறப்பதில்லை- போளி,போண்டா, வடை, ரொட்டிகளை-

இரவுச்சாப்பாட்டின்போது நண்பன் கேட்டுக் கொண்டதை மனைவியிடம்கூறினேன்-

"நான் இல்லாத நேரமென்றாலும் பரவாயில்லை-யாராவது மகேந்திரன் அனுப்பினார் என்று வந்தால் தேவை

கிக் கொண்டார்கள். இனிப்புபோதும்போதாது... ..ஒரு கதையும் இல்லை எனது வீட்டிலிருந்த 1 1|2வயது மகளை மட்டும் மாறி மாறித் தூக்கி விளையாடினார்கள். அவர்களுக்கும் இந்த வயதில் தங்கைமார் இருக்கலாம் என எண்ணிக் கொண்டேன்.

இயக்கம்-மறைவு வாழ்க்கை இதெல்லாம் முற்றாக வெளிவராத காலம், அந்த நண்பர் மீண்டும் வந்தார்: 200 |- காசை கைக்குள் வைத்து, "செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்"- என்றார்.

"அண்ணா இப்படிக் காசு தந்துதான் இவர்கள் இங்கு தங்குவார்களென்று தெரிந்திருந்தால்......"

"இல்லையண்ணே; கூபி! கட குடும்பக் கஷ்டம், வருமானம் எமக்குத் தெரியும் காசு பெரிதல்ல; ஆதரிக்கும் பண்புதான் பெரிது" -என்றார்.

"உங்கள் பெயர்?"

"ஸ்டீபன்" -அவர் போய் விட்டார்.

எங்கள் வீட்டிற்கு முன் பின் பக்கப் பாதைகள் இருக்கின்றன, எனக்குப் புரிந்து விட்டது இவர்கள் "இரவின் புதல்வர்கள்" என்று, ஒருவர் திருக்கோணமலை என்றார், மற்றவர் ஏறாவூர் என்றார்- இப்பெயர்கள் உண்மையோ பொய்யோ இதற்கு மேல் இப்படியானவர்களிடம் இருந்து எந்த மறுமொழியும் வராதென்பதுஎனக்குத் தெரியும்-

"தம்பியாட்கள் தற்செயலாக வித்தியாசம் ஏதும் என்டால் இந்தப் பின்பக்கப் பாதை வழியாகப் போய்... வேறொரு நம்பிக்கையான வீட்டிற்கும் வழிகாட்டி வந்தேன்-

அவர்கள் வாய் திறந்து சாப்பாட்டைக் கேட்பதே இல்லை- நாங்கள் வாய்க்கு ருசியாக நல்ல மீன், பொரியல், முட்டை என செய்து கொடுத்தால், ஒருவர் சாப்பிடுகிறார். மற்றவர்,[] .,

"என்ன தம்பி சாப்பாடு பிடிக்கலயோ?"

"இல்லை அண்ண, அவர் சைவம்"

அடடா, இதை இத்தனை நாளா ஏன் சொல்லல தம்பிக்கு மரக்கறிகள் செய்திருப்பமே, சரி நாளைக்கு ஸ்பெஷல் மரக்கறிதான்.

மறுநாள்......

ஐந்தாறு மரக்கறிகள் தாளிதம் செய்து இறக்கப்படு

வேண்டும்- அதுவும் தூரம் இடம்- இன்னொரு சமயம் வந்து சாப்பிடட்டும்" கண்கலங்கிய நிலையில் எமது குடும்பத்தினரிடம் விடைபெற்றுப் பாய்ந்தனர் என் மனைவிக்கு ஸ்டீபனில் கோபம் அப்படி என்ன அவசரமோ? சாப்பிட்டுவிட்டுப் போயிருக்கலாம்"

"விசரி" அவங்கட அவசரம் அவங்களுக்கு என்ன முக்கியமான பிரச்சினையோ? ' நாங்கள் சாப்பிடுவதற்கு ஆயத்தமானோம் நேற்றிரவுதான் அவர்கள் இருவரும் எமது "ஆட்டோஹிராபில்" "உங்கள் ஆதரவை என்றும் மறக்க மாட்டோம்" என்று எழுதி ரவி; சங்கர் என கையெழுத்திட்டு தந்தார்கள்

"நம்மட பிள்ளைகள் மாதிரி இருந்தார்கள்அவர்கள் போன பின் சாப்பாடே இறங்குதில்லை கொஞ்சம் பொறு அப்பா, ஏதாவது பார்த்துவிட்டு வாறன்"

"உங்களுக்கு பல வழிகள் இருக்கு துன்பத்தை ஆற்ற நாங்கள் அழுதுதானே கரைக்க வேண்டும்."

ஃ ஃ

அன்று இரவுபோல் கேள்விப்பட்டோம் ஒரு வண்டி புறப்பட்டுப் போய்விட்டதென்று,

"நம்மட தம்பிமாரும்இதில் தான் போயிருப்பினம் என்று நினைக்கிறன்"

"எங்கையய்யா வெளி நாட்டிற்கா?"

எல்லோரும் வெளிநாடு போய் உழைக்கலாம் என்றெண்ணி இருக்கிறதை வித்துச் சுட்டு, காணாததிற்கு அறாவட்டிக்கு காசு எடுத்து ஏஜென்சியால் அனுப்பப்பட்டும். சிலர் ஏமாற்றப்பட்டும் வேறு சிலர் கண்காணாத சீமையில் சிறையிலும், அகதிகளாகவும் அலைந்து திரிந்து கொண்டிருந்த காலமது

"இவர்களும் வெளிநாட்டிற்குத் தான் போகிறார்கள் உண்மைதான். ஆனா நீ நினைக்கிறமாதிரி அடிமைகளாய்: வெட்கம் கெட்டவர்களாய்: உதாசீனப்படுத்தப்பட்டவர்களாய்; சுயமரியாதையை இழந்தவர்களாய் பிச்சை எடுப்பதற்கு அல்ல"

"என்னது புதிதாகக் கூறுகிறீர்கள்? அப்படியானால் இவர்கள் . . ?"

"ஆம்? . இவர்கள் . ' விடுதலை வீரர்கள். தமிழீழத்தின் அடிமை விலங்கை அறுத்தெறி

"உன்னை விதவையாக்கி விட வேண்டாமென்றுதானே கூற நினைத்தாய், பைத்தியமே சாவு ஒரு நாள் தான் வரும். அச்சாவு'- நம் இனத்தின் விடுதலைக்காக ஏற்படுமென்றால் ---;;என் மனைவி தனது கரங்களால் என் வாயை மூடுகிறாள்.

ஃ ஃ

எமது குடும்பத்தினருடன் புல்லாவெளி அர்ச், செபஸ்தியார் கோவில் திருவிழாவிற்கு போவதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தோம். ஐந்தாறு குடும்பங்கள் சேர்ந்து ஒரு வான் பிடித்து சேர்ந்து போவது வழககம்.

"ஒரு மணிக்கு 'வான்' வருமாம் - ஏற்கனவே மூட்டை முடிச்சுகளை கட்டி வைத்திருந்தேன்.

"பாரப்பா எட்டுச்சாமான்கள், வேறு என்ன? ஏதாவது தவற விட்டிருக்கா?"

காட்டுக்குள் இருக்கும் கோவில் - வெய்யில் காலம் ஆனாலும் அந்த வெய்யிலில் கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிக்கு நடந்துபோய் கள்ளுக்குடித்து வருவதும், சுடு

## இனிதே முழங்கும் வெற்றியின் முழக்கம்."

என்னடா நினைத்து எம்மண்ணைத் தொட்டாய்
எடுத்து அடிவைக்க முடியுமோ? உன்னால்
பொன்விளை பூமியைப் புழுதிக்கா டாக்கினால்
பொசுங்கு வோமென்றா நினைத்தாய்'
துன்பங்கள் சுமந்து தூரங்கள் கடந்து
தொலேசான் இலக்கும் வரைநாம் நடப்போம்
இன்னும் என்னஇழந்திட இருக்கு
இன்னுயிர் ஒன்றே அதனையும் விடுவோம்

நில்லடா அங்கே நினைத்துப் பார்நீ
நிழலாய் தொடரும் அடிகளின் சரிதம்
கொலைபடை கொண்டு சூழுரைத் தாய்நீ
கொட்டிய குருதியில் தேசமும் சிவந்தது
வல்லவ னோநீ வந்தாய்? தாய்மண்
வலிமை யிழந்து அடிமை யாகிட
கல்லாய் நாங்கள் காட்சி தருவமோ
கனவேன் கண்டு களம்பல அமைத்தாய்;

எத்தனை காலம் உன்கால் தடவி
ஏங்கிக் கலங்கி எம்மவர் வாழ்வது
இந்தமண் எங்களின் சொந்த மண்ணென்பதை
இந்த உலகம் அறியு முனக்கேன்
இன்னும் சிந்தனை எழவில்லை என்றால்
இனிப் பொறுத்திருக்க ஏற்காது நெஞ்சம்
சின்ன விழிகள் சிவந்து நிற்கும்
சிறுத்தைகள் கூட்டம் செந்தணல் வீசும்

எங்கள் தேசம் விடியும் வரையும்
எங்கள் கரங்கள் உயர்ந்தே நிற்கும்
பொங்கும் குருதி புதிது புதிதாய்
பொலியும் மண்ணில் ஆறாய்ப் பாயும்
தங்கா தெங்கள் தமிழீழ தாகம்
தருக்கர்படைகள் போகும் வரைக்கும்
இங்கே இனியெவன் காலடி பதியும்
இனிதே முழங்கும் வெற்றியின் கீதம்!

- முருகு இரத்தினம்

# யுத்தம் சிறிலங்காவில் ஏற்படுத்தும் தாக்க அலைகள்

வடக்கு - கிழக்கு யுத்தத்தைத் தென் பகுதியில் அரசியல் வாதிகள் பலர் பல விதமாக நியாயப்படுத்திப் பேசுகிறார்கள். யுத்தத்தின் விளைவுகளும் தென்பகுதி மக்களிடமிருந்து மறைக்கப்படுகின்றன. ஆனால், யுத்தத்தின் விளைவுகளை இப்பொழுது தென்பகுதி மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். யுத்தத்தின் பாதிப்பை ஆரம்பத்தில் சிங்கள மக்கள் முறையாக- சரியாகப் புரிந்துகொள்ளா விட்டாலும், இப்பொழுது ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு, வரவு - செலவுத் திட்டத்தில் இராணுவச் செலவின் குறுக்கீடு, செலவினங்களை ஈடுசெய்வதற்காக அறா விலையில் தொழில் முயற்சிகளைக் கடல் கடந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பது ஆகிய இன்னோரன்ன நடவடிக்கைகள் பொருளாதார வகையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. குழந்தை முதல் அனைவரையும் ஆட்டி அசைக்கும் போர்ச் செலவுகளின் விளைவுகளை அலசி ஆராயும் நூல்கள் மற்றும் அறிக்கைகள் சில கொழும்பில் வெளிவந்துள்ளன.

விவசாய அபிவிருத்திக்கான ஐ. நா. சர்வதேச நிதியம் (IFAD) அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றிலிருந்து, கடந்த இருபது வருட காலப் பகுதியில் கிராம மட்டத்தில் ஏழ்மை மிகவும் அதிகரித்துள்ள ஐந்து நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று என்று இனங்காணப்பட்டுள்ளது. 114 வளர்முக நாடுகளில் இந்த ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. சாம்பியா, மாலி, பிரேசில் மற்றும் கென்யா ஆகியன கிராமங்களில் வறுமைப் பண்புகள் காணப்படும் மற்ற நாடுகளாகும். போசாக்கின்மையானது, சிறிலங்காவில் ஐந்து வயதுக்குக் குறைந்த வயதெல்லையினர் மத்தியில் 60 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என்று, குறிப்பிட்ட துறையில் யுனிஸ்செவ் (UNICEF) ஆய்வு செய்து 1993-ல் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

''இவ்வகையான பின்புலத்தில் அபிவிருத்தி நாட்டில் இடம்பெறாது என்றுபலவாறு கூறப்பட்டுள்ளது. 'அபிவிருத்தியியல்' வெறும் அபிவிருத்தித் தோற்றத்தைத் தருகிறது; திறந்த சந்தைக்கொள்கை ஆசை காட்டி ஏமாற்றும் நடவடிக்கையாகும். சிறிலங்கா வரும் வெளி நாட்டவரும், அறியும் சக்தியில்லாத அப்பாவிச் சிறிலங்கா மக்களும் இதனால் ஏமாற்றப்படுகிறார்கள். அபிவிருத்தித்திட்டங்கள் வெற்றி அளித்துள்ளன என்று அரச கட்டுப்பாட்டிலுள்ள அச்சு வழிச் செய்தித்துறையிலும், வானொலி மற்றும் தொலைக் காட்சியிலும் அரசியல் வாதிகள் நம்பிக்கைதெரிவிக்கிறார்கள். ஆனால் இந்தப் பேச்சுக்கள் மக்களின் ஏழ்மையில் எந்த விதமான மாற்றத்தையும் செய்ததாக இல்லை. மக்களின் வறுமை வேகமாக வளர்ந்து கொண்டே போகிறது. அதிகமான வாகனங்களும், நவீன சந்தைகளும் வறுமை ஒழிப்பின் அறிகுறியாகாது'' (Hand book for Peace Activities)

## பணவீக்கம்

உத்தியோகபூர்வ அறிவித்தலின் பிரகாரம் சிறிலங்காவின் பணவீக்கம் 13 சதவிகிதமாகும். மத்திய வங்கி (1993 அறிக்கை) இதனை உறுதி செய்துள்ளது. ஆனால், 1990-ல் 21 சத விகிதமாக இருந்த பணவீக்கம் படிப் படியாகக் குறைந்துள்ளது என்று மத்திய வங்கி நியாயப்படுத்துகிறது. பணவீக்கம் இறங்கு வரிசையில் குறைந்தது என்ற மத்திய வங்கியின் கூற்றை நாம் ஏற்றுக்கொண்டாலும், மற்ற ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போதுநிலைமை மிக மோசமாக உள்ளது. பங்களாதேஸின் 5 சத விகிதப் பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது சிறிலங்காவின் 13 சதவிகிதப் பணவீக்கம் அதிகமானதே சிறிலங்காவின் பொருளாதாரத் தளம்பலை மதிப்பிட உதவும் அளவுகோலாக ஏனைய ஆசிய நாடுகளின் பணவீக்க நிலையை ஒப்பிடலாம். இந்தியா 6.4 சத விகிதம். மலேசியா 4.3 சத விகிதம். பாகிஸ்தான் 10 சதவிகிதம். தாய்லாந்து 4.5 சதவிகிதம். சிங்கப்பூர் 2 4 சதவிகிதம். இந்தோனேசியா 9.5சத விகிதம். தென்கொரியா 4.8 சதவிகிதம். பிலிப்பைன்ஸ் 6.7 சதவிகிதம். சீனா 8.6 சதவிகிதம். ஹொங்ஹொங் 7.7 சதவிகிதம். தைவான் 2 சதவிகிதம். சிறிலங்காவின் பணவீக்கம் மற்ற ஆசியநாடுகளை விட அதிகளவில் இருக்கிறது என்பதை நம்பகமான முறையில் கண்டறிய மேற்குறிப்பிட்ட தரவுகள் உதவுகின்றன.

பணவீக்கம் குறித்து மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை அல்லது தரவு சரியானதல்ல என்று பணவீக்கம் பற்றி அறிந்தவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். மத்திய வங்கி அறிக்கையை சுயநல அரசியல் நிர்ணயிப்பது மோசமான காரியமாகும். இங்கிலாந்தில் வெளிவரும் சிறிலங்கா மொனிற்ரர் (Sri Lanka Monitor) என்ற சஞ்சிகை ஜூன் 1993 பதிப்பில் சிறிலங்காவின் பணவீக்க நிலை 19 சதவிகிதம் என்கிறது.

21 சதவிகிதமாக இருந்த பணவீக்கம் 1990இல் 13சத விகிதமாக அல்லது அதை விடக் குறைந்து விட்டது என்று மத்தியவங்கி அறிக்கை வெளியிட்டது. ஏசியா வீக் (Asia week) உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட தரவுகளை மேற்கோள் காட்டி மத்திய வங்கியின் பொறுப்பையும், நம்பகத் தன்மையையும் சாடுகிறது. சிறிலங்காவின் பொருளாதார முன்னேற்றம் 1990, 1991 ஆம் ஆண்டுகளில் முறையே 5 சத விகிதம் மற்றும் 6.2 விகிதம் என்று மத்திய வங்கி அறிக்கை தெரியப்படுத்துகின்றது. இந்த ஆண்டுகளில் சிறிலங்காவின் பொருளாதார முன்னேற்றம் 2 சத விகிதமும், 4.5 விகிதமும் என உலகவங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் தரவுகள் சுட்டுகின்றன. மத்திய வங்கி வெளியிடும் தரவுகளின் நம்பகத்தன்மை குறித்துக் கணக்காளர் நாயகம் காமினி எப்பாவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

1977 - 1990 காலப்பகுதியில் சிறிலங்காவில் (தென் இலங்கையில்) விலைவாசிகள் ஏறுவரிசையில் உயர்ந்துள்ளதையே காண முடிகிறது. அரிசி விலை 400 சதவிகிதம் அதிகரிப்பு (ரூபா 3.70இல் இருந்து ரூபா 18.50), சீனி விலை 293 சதவிகிதம் அதிகரிப்பு (ரூபா 6.25 - ரூபா 26-00). பால்மா 823 சதவிகிதம் அதிகரிப்பு (ரூபா 12.13 - ரூபா 112 - 00). மாவு 828 சதவிகிதம் அதிகரிப்பு (ரூபா 1.32 - ரூபா 12.25). தேங்காய் 867 சதவிகிதம் அதிகரிப்பு (ரூபா 1.42 - ரூபா 650) விலைவாசிகள் அதிகரிக்கிறதே அல்லாமல் குறைந்ததாக இல்லை. முழுத் தென் இலங்கைச் சமூகத்திற்குமே பணவீக்கத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள இந்த விலைவாசிகள் ஏற்றம் பற்றி நிதி அமைச்சர் கணக்குச் சொல்ல வேண்டியவர் ஆகிறார்.

(வடக்கு - கிழக்குநிலைமைகள் விசேஷத்தன்மை கொண்டவை அந்தத் தரவுகள் இங்கு தரப்படவில்லை.)

1993 ஜூன் நடுப்பகுதி விலைவாசிகள் வருமாறு:

- ஒரு கிலோ மாவு ரூபா 11.75இல்இருந்து 13.10 ஆக அதிகரித்தது. பாணின் விலையும் ரூபா 4.50 இல் இருந்து ரூபா 5 00 ஆக உயர்ந்தது.
- லீற்றர் மண்ணெய் ரூபா 9-00இல் இருந்து ரூபா 12.00ஆக அதிகரித்தது.
- டீசல் லீற்றர் ரூபா 11.65 இல் இருந்து ரூபா 11.80 ஆகவும் தொடர்ந்தாற் போல் ரூபா 11.90 ஆகவும் அதிகரித்தது.
- மின்சாரம் 20இல் இருந்து 30 சதவிகிதமாக அதிகரித்தது மின்சார விலை அதிகரிப்புபோக்குவரத்து மற்றும் உற்பத்தித்துறைகளையும் பாதித்தது.

> 'பேச்சுக்கள் மக்களின் ஏழ்மையில் எந்த விதமான மாற்றத்தையும் செய்ததாக இல்லை. வறுமை வேகமாக வளர்ந்து கொண்டே போகிறது. வாகனங்களும்நவீன சந்தைகளும் வறுமை ஒழிப்பின் அறிகுறியாகாது.

- 500 கிறாம் லக்ஸ் பிறே ரூபா 56.00இல் இருந்து ரூபா 59.00ஆக உயர்ந்தது.
- ஒரு யார் பூ கொடச் சீத்தை ரூபா 52.00இல் இருந்து ரூபா 55.60 ஆக அதிகரித்தது.

உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்தின் அழுத்தத்தினால் சிறிலங்கா அரசு பணத்தின் மதிப்பைக் குறைத்தது. ரூபாவின் மதிப்புக் குறைவு பணவீக்கத்துக்கான காரணங்களில் ஒன்றாகும். இதனைத் தொடர்ந்து, 1977இல் 8 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலரின் நாணய மாற்று வீதம் இன்று 48 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதனால் பொருள்கள் யானை விலையாக அதிகரித்துள்ளன.

## வருமான அளவும் வாழ்க்கைச் செலவும்

1978இல் 182 அமெரிக்க டொலராக இருந்த தலைவீத தேசிய மொத்த வருமானம், விலை விபரங்களின் படி 1991இல் 465 அமெரிக்க டொலராக அதிகரித்தது. இது 155 சதவிகித அதிகரிப்பாகும். அதேவேளை, 1978-ல் 227.8 ஆக இருந்த (கொழும்பு) நுகர்வோர் விலைச் சுட்டெண் 1991இல் 1135.5 ஆக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 398 சதவிகிதமாகும். வருமானத்திற்கும் வாழ்க்கைச் செலவுக்கும் இடையில் உள்ள சமச்சீரின்மையை இந்தத் தரவுகள் காட்டுகின்றன. ஆனால் மக்களின் சுமையைத் தரவுகளிலிருந்து சரியாக அறிந்து கொள்வது கடினம்.

தனிநபர் சராசரி வருமான அபிவிருத்தியை ஏசியா வீக் மதிப்பீடு செய்துள்ளது. 1965-1990 காலப்பகுதியின் சிறிலங்காவின் தனிநபர் சராசரி வருமான அபிவிருத்தி 3 சத விகிதமாகும். அதேவேளை தனிநபர் சராசரி வருமான அபிவிருத்தி இந்தோனேசியாவில் 4.3 சதவிகிதமாகவும், மலேசியாவில் 4 சதவிகிதமாகவும், சீனாவில் 5.4 சதவிகிதமாகவும் அதிகரித்துக் காணப்படுகிறது.

## வறுமை நிலை

உலகில் உள்ள 42 ஏழ்மை நாடுகளில் சிறிலங்கா 31-வது இடத்தில் உள்ளது. ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் மத்தியிலான இடைவெளியில் பிரேஸிலுக்கு அடுத்த படியில் சிறிலங்கா!

1973 - 1985 காலப்பகுதியில் சிறிலங்காவில் மிக உயர்வான 10 சதவிகிதம் பணக்காரர்களின் வருமானம் 30 சதவிகிதத்திலிருந்து 49.3 சத விகிதமாக அதிகரித்துள்ளது. இதே காலப்பகுதியில் 40 சதவிகித அடிமட்ட மக்களின் வருமானம் 15.1 சதவிகிதத்திலிருந்து 7.1 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. (அரச புள்ளிவிபரத் திணைக்கள ஆய்வு)

முழு இலங்கையிலும் சுமார் 50 சதவிகிதம் மக்கள் - 17,000,000 சனத்தொகை 8,253,207 பேர் - வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களை 750க்குக் கீழ் குடும்ப வருமானம் பெறுபவர்கள் என அரசு வரையறை செய்துள்ளது. இவை 'ஜனசவிய' திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முன் வைத்த தரவுகளாகும். 'ஜனசவிய' திட்டத்தை ஒன்பது கட்டங்களில் அமுல் படுத்தப் போவதாக அரசு அறிவித்தது. ஆனால், இன்று வரை மூன்றுகட்டங்கள்தான் அமுல் படுத்தப்பட்டுள்ளன. உணவு முத்திரையை இல்லாமல் செய்யவே 'ஜன சவிய' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், ஜனத்தொகையில் 21 சதவிகிதம் மக்கள் கடுமையான வறுமையில் வாழ்கின்றனர். இவர்களின் குடும்ப வருமானம் மாதாந்தம் 200 ரூபாவுக்குக் கீழ் என்று அரச புள்ளிவிபர திணைக்கள அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. மேலும் 1,000,000 பேருக்கு வேலை வாய்ப்பு இல்லை.

## பொதுச் செலவுத்துறை

அரசு மேற்கொள்ளும் பொதுச் செலவுகளுக்கு பாராளுமன்றத்திற்கு மட்டுமின்றி மக்களுக்கும் பொறுப்பாயிருக்க நேரிடுகிறது. அரசு மனித நல சேவையில் மிக உயர்ந்த தரத்தை நிலைநாட்ட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சிறிலங்காவில் நிலைமை வேறுவிதமாக உள்ளது. சிறிலங்காவில் 4150 பேருக்கு ஒரு டாக்டர். 1850 பேருக்கு ஒரு தாதி என்ற விகிதத்தில் மருத்துவ சேவை உள்ளது. 21,000 பேருக்கு ஒரு பொதுச் சுகாதார உத்தியோகத்தர் சிறிலங்காவில் காணப்படுவது ஆசியாவிலேயே மிகக் குறைந்த நிலையாகும். மற்றும்படி, 320 பேருக்கு ஒரு பொலிஸ். 170 பேருக்கு ஓர் இராணுவச் சிப்பாய் என்பது ஆசியாவிலேயே ஒரு 'சாதனை'யாகும். 1983இல் இராணுவச் செலவு ஒரு பில்லியன் ரூபா. 1993-ல் இராணுவச் செலவு 23 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது இராணுவச் செலவு 25 பில்லியன் ரூபா என்று கூறியுள்ளார்.

## சிறார் பிரச்சினைகள்

பிறந்த குழந்தையின் ஆகக் குறைந்த எடை ஐந்து இறாத்தலாவது இருக்க வேண்டும். சிறிலங்காவில் ஆகக் குறைந்த எடையை விடக் குறைவான எடையில் பிறக்கும் குழந்தைகள் 28 சத விகிதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. (உலக அபிவிருத்தி அறிக்கை, உலக வங்கி, 1992) 'குழந்தை விபச்சாரத்தில்' சுமார் 30,000 ஆண் சிறுவர்கள் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஆயிரம் பேர் தான் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அறிக்கை கூறுகிறது. மாறான புள்ளி விபரங்கள் தரப்பட்டாலும், இந்த விவகாரத்தில் சிறிலங்கா உலகப் பிரசித்தம். இனி, ஆரம்பப் பாடசாலை மாணவர்களில் 93 சதவிகிதத்தினர் தவறான உணவூட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் (திட்டமிடல் அமைச்சு)

## போதைவஸ்து, மதுப்பழக்கம்

தனிநபர் மது நுகர்ச்சியில் சிறிலங்கா உலகில் முதலிடத்தில உள்ளது. சிறிலங்காவில் 15-25 வயதுக்கு உட்பட்ட சுமார் 50,000 பேர் போதைவஸ்துக்கு அடிமையாகி உள்ளார்கள். போதைவஸ்துப் பழக்கமுள்ளவர்கள் வருடமொன்றுக்குச்சுமார் 14.4பில்லியன் ரூபா ஹெரோயின் கொள்வனவு செய்வதில் செலவு செய்கிறார்கள். இதனைப் பொலிஸ் போதை வஸ்துத் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

## ஏனைய விவகாரங்கள்

பாலியல் சம்பந்தமான நோய்களில் (வி.டி) உலகில் சிறிலங்கா மூன்றாவது இடத்தில் உள்ளது. கொழும்பில் மாத்திரம் சுமார் 40,000 விபச்சாரிகள் இருப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. சிறிலங்காவில்சுமார்1,00,000பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் (டாக்டர் ஜே சி. மனுவல், வி.டி நிபுணர் குருநாகல் மருத்துவமனை) குவைத்தில் சிறிலங்கா தூதுவராலயத்தில் மாதமொன்றுக்குச் சுமார் 1000 சிறிலங்காப் பணிப் பெண்கள் அடைக்கலம் நாடுகிறார்கள். கொழும்பில் தினமும் 1000 முதல் 1500 கருச் சிதைவுகள் இடம் பெறுகின்றன. (சுகாதாரத் திணைக்கள ஆய்வறிக்கை) கடந்த நான்கு மாதங்களில் நீர்கொழும்பில் ஒரு தனியார் மருத்துவ மனையில் 7072 கருச் சிதைவுகள் செய்யப்பட்டுள்ளன. சிறிலங்காவில் 96 எயிட்ஸ் நோயாளர் கண்டுகொள்ளப்பட்டுள்ளனர். கி.பி. 2000 த்தில் எயிட்ஸ் நோயாளர் எண்ணிக்கை 3,20,000 ஆக அதிகரிக்கும் என டாக்டர் காமினி ஜெயசூரிய தெரிவித்துள்ளார். இவை எல்லாம் இன்று சிறிலங்காவில் நடக்கும் விஷயங்கள். யுத்தத்துக்கும் மக்களின் அன்றாடவாழ்வுக்கும் தொடர்புண்டு என்பதை வெளிப்படுத்தும் ஆதாரங்கள் இவை.

**மதன்**

(மூலம்: Hand-book for Peace Activities, November 1993)

# முடிவிற்கு

அப்படி யென்றா எங்களையும் பிடிப்பாங்களோ?''

நிச்சயமாக சொல்ல முடியாது- எதற்கும் கவனமாக இரு- இரவில் வீட்டில் படுக்காது வேறு எங்காவது...

தோழா நீ இளந்தாரி-எங்க படுத்தாலும் சரி- நான் குடும்பகாரன்-சரி பார்ப்போம்'

ஃ ஃ

ஐந்தாண்டுகளில் எத்தனையோ காணாமல் போயிருக்கிறார்கள்- கொல்லப்பட்டிருக்கிறார்கள், இயக்கங்களில் சேர்ந்திருக்கிறார்கள்.

ஓர் இரவு 7.00 மணியிருக்கும்

''அக்கா; அண்ணன்... அண்ணன்

யார் இந்த நேரத்தில...'

நான்தான் அக்கா கதவைத் திறவுங்கள்'' - கதவு திறபடுகின்றது-

நான்தான் அக்கா சங்கர் ஒரு முக்கிய வேலையாக வந்திருக்கின்றேன்- அண்ணன் இல்லையா'

அக்கா அழுகிறாள்-அழுது கொண்டே விறாந்தைக்கு செல்கின்றாள்- சங்கரும் பின் தொடர்கின்றான்- அக்காவில் தான் எத்தனை மாற்றம்- சரியாக மெலிந்திருக்கிறார். சங்கர் தனக்குள் கவலை கொள்கின்றான். அன்று எமக்கு உணவளித்து காப்பாற்றியவள்.

''அடே பாமாக்குட்டி வளர்ந்திட்டாளே! மாமாவை?'' தெரியுமாம்மாஸ்ரீசங்கர் கேட்டுக்கொண்டேதான் கொண்டு வந்த ''கன்டொஸ்''பக்கற்றை கொடுக்கின்றான்- தற்செயலாக நிமிர்ந்தவன் கண்ணில் அண்ணனின் படம் பெரிதாக்கப்பட்டு மாலை ஒன்று அலங்கரிக்கிறது.

''அக்கா...அண்ணா.. அண்ணாவுக்கு...?''

''ஸ்டீபன் அண்ணா சுடப்பட்டு இறந்தபின், ஒருமாதம் கழிந்திருக்கும்- இரவு போல் எமது வெளிக்கதவு பலவந்தமாகத் திறக்கப்படுகின்றது- வழமையாக அண்ணா இரவு நேரங்களில் வீட்டில் படுப்பது குறைவு- ஆனால் அன்று வீட்டில்தான் படுத்திருந்தார்- கதவைத் திறந்தால் துப்பாக்கிகளுடன் .....அவரைப் பிடித்து அதிலேயே போட்டு மிருகத்தனமாக தாக்கினார்கள்-

''ஆயுதங்கள் எங்கேபுதைக்கப்பட்டிருக்கின்றது.''

''எனக்குத் தெரியாது... தெரியாது என அடியின் வேதனையால் குளறக் குளறஅவர்கள் தாக்கிக் கொண்டேஇருந்தார்கள்-

''சொல்லடா, ஸ்டீபன் எல்லாம் சொல்லி விட்டுத்தான் செத்தான்- நீயும் உண்மையைச் சொல்லி விடு''அவரின் மண்டை பிளந்திருந்து, மூக்கு, வாய் எல்லாம் உடைபட்டு இரத்தம்...

''ஐயோ அவரை விட்டிடுங்க அவருக்கு ஒன்றுமே தெரியாது''

''அப்பா... அப்பா... அப்பாவை அடிக்காதீங்க''

என்குழந்தை மூர்ச்சையாகிவிட்டது. நானும்...

விழிப்பு வந்து பார்க்கும் போது, விறாந்தை எல்லாம் இரத்தம்-சகல பொருட்களும் சோதனையிடப்பட்டு தாறுமாறாகக் கிடந்தன-

''ஐயோ அவர் அவருக்கு''

தங்கச்சி உன்ர புருசனை இழுத்து வானில போட்டுக் கொண்டு போறாங்க''

''ஐயோ, அவரை என்ன செய்யப் போறாங்களோ கடவுளே''... !

மறுநாள் காலை...

''தங்கச்சி தம்பியின்ர... பொடி பண்ணைப் பாலத்தில...

அக்கா அழுது கொண்டிருக்கிறாள்

சங்கர் மறுபக்கமாகத் திரும்பி கண்களைத் துடைத்துக் கொள்ளுகின்றான்-அவனது உடம்பு முழுவதுமே பதறுவது அக்காவுக்குத் தெரியவில்லை-

''அக்கா...நான் போயிற்று...

''தம்பி சாப்பிட்டு விட்டுப் போ'' அக்காவே சோற்றைக் குழைத்து அவனது கையில் கொடுக்கிறாள் -கண்களில் நீர் வழிய ஆவலோடும் ஆசையோடும் சாப்பிடுகிறான் சங்கர்-

''தம்பி இப்ப நன்றாக வளர்ந்து விட்டாய் அதென்ன கழுத்தில்?'

''அதக்கா தாயத்து''-சங்கர் பாமாவைக் கொஞ்சி விட்டு வெளியேறுகின்றான்-

ஃ ஃ

இரண்டு நாட்களின் பின் இரவிரவாக துவக்குச் சூட்டு சத்தங்கள்- இடையிடையே பெரிய பெரிய சத்தங்கள்; எதோ கட்டடம் உடைவது மாதிரி-

விடியப்புறம் ..

பொலிஸ்ஸ்ரேசன் கட்டடம் தரைமட்டமாம்- அதில் இருந்த அத்தனை பொலிஸ்காரரும் கொல்லப்பட்டு விட்டார்களாம்-

இத்துணிகரத் தாக்குதலை தலைமை தாங்கி நடத்திய லெப் சங்கர் வீரச்சாவடைந்துவிட்டாராம்.

அக்காவின் காதுகளில் இச்செய்தி விழுந்தபோது அக்கா அழுகையின் ஊடே சிரித்தபடி

''பாமா' சங்கர் மாமா அப்பாவைக்கொன்றவர்களை பழிவாங்கிவிட்டார்''

அக்கா நிம்மதியான மூச்சொன்றை விடுகிறாள்.

பாவம் பேதை அவள் தன்னளவிலேயே எண்ணிக் கொண்டாள்.


## விவசாய டிப்ளோமா

### ஒருவருட இருவருட கால இலவச பயிற்சி நெறிகள்

**ஒருவருட விவசாய டிப்ளோமா**

போதிக்கப்படும் பாடங்கள்

மிருக பரிபாலனம், பயிர்வேளாண்மை, பூங்கனியியல், விவசாய மூலதத்துவம், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்) மனைப் பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்.

**தகைமை:**

க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் 31-05-94 இல் வயது 16—> 24 க்கும் இடைப்பட்டிருக்க வேண்டும்.

**இரண்டு வருட விவசாய டிப்ளோமா**

போதிக்கப்படும் பாடங்கள்

முதலாம் வருடம் ஒருவருடகால டிப்ளோமா நெறியிலுள்ள பாடங்கள் போதிக்கப்படும். இரண்டாம் வருடம் விவசாய தாவரவியல், விவசாய இரசாயனவியல், பயிர் பாதுகாப்பு, விவசாய விரிவாக்கம், பயிர் வேளாண்மை, பூங்கனியியல், மிருக பரிபாலனம், மிருக சுகாதாரம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படும்

**தகைமை:**

(அ) க. பொ. த (உயர்தர)ப்பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் விஞ்ஞான பாடங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும் அல்லது க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் எமது நிறுவனத்தில் ஒருவருடகால டிப்ளோமா பயிற்சி நெறியில இரண்டாம் பிரிவுக்கு மேல் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 31 - 5 - 94 இல் வயது 18 - 26 க்கும் இடைப்பட்டிருக்க வேண்டும்.

❋ இரு கற்கைநெறிகளுக்கும் கற்கை காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்- விருப்பமுள்ள இருபாலாரும் 20-04-94 முன் பின்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்,

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்.

(7700)



## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**அளவையியல் S.S.மனோகரன்**

மீட்டல் வகுப்பு

**ஆரம்பம்: 12-03-1994**

சனி காலை 8-00 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி-8787)



## வகுப்புகள் ஆரம்பம்

வட இலங்கை ஹோமியோபதி, அக்குபங்சர் சங்கங்கள் மெடிசினா ஆல்ட்டனேரிவாவுடன் இணைந்து சர்வதேச திறந்தவெளி மாற்று வைத்திய பல்கலைக்கழக பட்டங்கள் பெற நடாத்தும் அடுத்த வகுப்புகள் 1 - 5 - 94 இல் ஆரம்பமாகின்றன. விண்ணப்பப் படிவங்களை ஞாயிற்றுக் கிழமைகளில் கீழ்க்காணும் விலாசத்தில் காலை 8. 00 மணி தொடக்கம் பகல் 2. 00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

Dr. அ. கிருஸ்ணசாமி
தலைவர்
வ. இ. ஹோ. சங்கம்

Dr. S. T. புவிராசன்
தலைவர்
வ. இ. அ சங்கம்

35, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(7685)


## 4-ம் மாத நினைவலைகள்



**கப்டன் கரிகாலன் (மஞ்சு)**

(தர்மரத்தினம் பிரபாகரன்)

தாயின் மடியில் 16-11-1972 — தாயக மண்ணில் 11-11 1993

பூநகரியில் உரமான மாவீரா!
ஈழத்தின் இதயங்களில் பதிந்த கரிகாலா!
விடிவிற்கு உன் உதிரங்கள்
இம்மண்ணை சிவப்பாக்கியதோ
ஓ! மாவீரனே!
உன் பாதச் சுவட்டில் எங்கள் பாதங்களை
பதித்து தொடருவோம்.

(7684) - நண்பர்கள்




திரு. செல்வராஜ் (ராயு)

சீகான் குசைனீஸ் எக்சர்காய் கராட்டி

## மாணவர் தேர்வும் பட்டி வழங்கலும்

ஜப்பானில் 5-வது கறுப்புப் பட்டியைப் பெற்ற சீகான் குசைனீ அவர்களிடம் இந்தியாவில் பயின்று முதலாவது கறுப்புப் பட்டியைப் பெற்றவரான

**திரு. செல்வராஜ் (ராயு)**

அவர்கள் சாவகச்சேரி, உடுத்துறை, பளை, கிளாலி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கு தேர்வும் பட்டி வழங்கல் வைபவமும் எதிர்வரும் 12 - 03 -94 அன்று சனிக்கிழமை மு. ப. 6 மணி தொடக்கம் பி. ப. 6 மணிவரை கிளிகிளாலி றோ. க. த. க. வித்தியாலயத்தில் நடைபெறும்.

(7693)

# ஜனாதிபதி டி. பி. யின் இன்றைய போக்கில்

# சமாதான தீர்விற்கு வாய்ப்பில்லை

'சிறிலங்காவை ஒரு தனிச் சிங்கள நாடாகவும் அதில் ஏனையவர்கள் அடிமைகள் என்ற கோதாவில் இருக்கும் கண்டியச் சிங்களவரிடையே தானொரு சிங்கள இனத்தின் குறிப்பாக கண்டிச் சிங்கள 'கெவிகம' பாரம்பரியத்திற்கு உள்ளடங்கிய ஓர் 'வீரபுரன் அப்பு' என தன்னை உருவாக்கிக் கொள்ளவும் அதற்கு இசைந்தால் போல் பல நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முனைந்து வருகின்றார். இதற்காக அவர்பலவிடயங்களை ஆணித்தரமாகத் தெரிவித்துமுள்ளார்'

இது அண்மையில் பி.பி.ஸி சிங்கள சேவையான சந்தேசியவிற்கு அதன் கொழும்பு செய்தியாளர் எல்மோ பெர்னான்டோவும், ராவய ஆசிரியர் விக்டர் ஐவனும், யுக்திய ஆசிரியரான சுனந்த தேசபிரிய என்பவரும் வெளியிட்டிருந்த கருத்துக்களின் அடிப்படையிலான முடிவாகும்.

டி.பி. விஜேதுங்கா காலத்திற்குக் காலம் வெளியிட்டு வரும் அறிக்கைகள் முன்னுக்குப் பின் முரண்பாடானவையாக தோற்றமளிப்பினும், அவை சரியான இலக்கைக் கொண்டு ஒரு அரசியற் பின்புலத்தைத் தனக்காக உருவாக்குவதற்கான அடிப்படையிலான தொன்றாகும். அதாவது தனது தெளிவானதொரு குறிக்கோள் முரண்பாடான அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் சாதித்துவிட எண்ணுகின்றார் டி, பி, விஜேதுங்கா-

இதன் பிரகாரம்டி.பி.விஜேதுங்கா தனது அரசியற் பின்புலத்தை உயர்வகுப்பு கண்டிய-பௌத்த சிங்களவரிடம் அமைத்துக் கொள்ள முற்படுகின்றார்- இதற்காக தன்னை கண்டிய கெவிகம வகுப்பினர் என்பதை வெளிக்காட்டிக் கொள்வதிலும் முனைந்து நிற்கின்றார்-

இதேவேளை கண்டி-பௌத்தர்களிடத்தில் தனது நிலையை பலப்படுத்திக் கொள்ள சில ஆதரவாளர்களையும் அவர் பெற்றுள்ளார். பௌத்த உயர் பீடங்களில் டி.பி. விஜேதுங்காவிற்கு உறவு முறை சார்ந்த சிலர் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடிய பலமான நிலையில் இருப்பதாக கூறப்படுகின்றது. இவர்களின் செல்வாக்கே டி-பி- விஜேதுங்கா கடந்த காலத் தேர்தல்களில் வெற்றியீட்டுவதற்கும் காரணமாகியது என்றும் அறிய வருகின்றது-

இந்த வகையில் டி-பி-விஜேதுங்காவின் பிரதான குறிக்கோள் 27 வீத வாக்குகளைக் கொண்ட கண்டிச் சிங்களவரின் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கொள்வதே ஆகும்-

ஆனால் கண்டிச் சிங்களவர்களைப் பொறுத்து கடந்த காலத்தில் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்ததை விட சிறிலங்கா சுதந்திரக் கட்சியினையே ஆதரித்து வந்துள்ளனர் அதிலும் ஜே.ஆர் ஜெயவர்த்தனா காலத்திலும், பிரேமதாசா காலத்திலும் தமது ஆளும் அதிகாரம் கரையோரச் சிங்களவரிடம் கைமாறி விட்டதாகவே கண்டிச் சிங்களவர் கருதினர் இந்நிலையில் கடந்த காலத்தேர்தல்களின் அடிப்படையில் நோக்கும் போது மலைநாட்டு சிங்களவர்களின் வாக்குகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 49 வீதமான வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 32 வீதமான வாக்குகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில், டி. பி. விஜேதுங்காவின் வருகையானது கண்டிச் சிங்களவருக்குச் சற்று திருப்தியளித்தது. இந்த நிலையில் டி. பி. விஜேதுங்காவும், கண்டிச் சிங்களவரின் செல்வாக்கை முழுமையாக தனது பக்கம் திரட்டும் நோக்கமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்த முரண்பாட்டைதனக்குச்சாதகமாக்கி அநுராபண்டாரநாயக்காவை தனது பக்கம் சேர்த்துக் கொண்டார். அத்தோடு மலையகத்தில் தனது அரசியல் பின்புலத்தை கொண்டிருந்த காமினி திசாநாயக்காவையும் இணைத்துக் கொண்டார்.

டி.பி.விஜேதுங்கா இணைத்துக் கொண்ட இருவரும் மலையகத்தில் அரசியல் செல்வாக்குக் கொண்டவர்கள் என்பதை விட 'கெவிகம' வகுப்பைச் சேர்ந்த இரு கண்டிச் சிங்களவர்கள் என்பது முக்கியமான அம்சமாகும்.

கண்டிச் சிங்களவரின் ஆதரவுதளத்தைவிஸ்தரிப்பதற்காக தனது அரசியல் செயற்பாட்டில் எதிர்க்கட்சிகளுக்கிடையில், பிளவுகள் உண்டாக்கிய டி. பி- விஜேதுங்கா மேலும் தனது நிலையை உறுதிப்படுத்த ஐ-தே-கவின் கூட்டணிக் கட்சியான இ. தொ. காவையும் பிளவுபடுத்துவதில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டார் என்றே கூறமுடியும்-

இ-தொ-காவைப் பிளவுபடுத்தும் டி-பி-விஜேதுங்காவின் முடிவானது தனியாக மலையகத்தில் தமிழ்மக்களின் அரசியல் ஸ்திரணத்தன்மையைக் குலைத்து விடுவது என்பது மட்டுமல்ல, கண்டிச் சிங்களவர் மத்தியில் ஆழமாக வேரூன்றிய மலையகத் தமிழ் மக்கள் மீதான வெறுப்பிற்கு முதன்மை கொடுத்து,இதன் மூலம் கண்டியரின் தேசிய வீரனாக டி. பி. தன்னை காட்ட முற்பட்டார்-

கண்டிச் சிங்களவர் மலையகத் தமிழர்களினால் தங்கள் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டதாக கருதுகின்றனர்- இவற்றை மீட்டெடுக்க வேண்டும் என்ற அவர்களின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு அளிப்பதான தனது நிலைப்பாடானது அவர்கள் மத்தியில் தனது செல்வாக்கை அதிகரிக்க உதவும் என டி-பி- விஜேதுங்கா கருதுகின்றார்- இதன் மூலம் 1956ஆம் ஆண்டில் கொண்டுவந்த சுயபாஷா திட்டம், தனிச் சிங்கள மசோதா போன்றவற்றால் உருவான எழுச்சியைப் போன்று கண்டியர் மத்தியில் ''மலையகம் கண்டிச் சிங்களவருக்கே'' என்றதொரு நிலையை உருவாக்குவதன் மூலம், எழும் உணர்ச்சிக் கிளம்பலின் தனது தேர்தல் குறிக்கோளை எட்டி டி. பி- விஜேதுங்கா எட்ட முற்படுகின்றார்

இதன் ஒரு கட்டமாகவே மலையகத்தில் தமிழர் மத்தியில் இருந்த அரசியல் ஸ்திரணத்தன்மையை உடைப்பதில் டி. பி. விஜேதுங்கா ஈடுபட்டார்- அமைச்சர் தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் இடையில் இருந்த இழுபறிகள் முரண்பாடுகள் என்பனவற்றை தமக்குச் சாதமாகப் பயன்படுத்தியும் கொண்டுள்ளார்

டி-பி- விஜேதுங்காவின் அரசியல் நிலைப்பாடும் இனவாத அணுகு முறையும் பற்றி அமைச்சர் தொண்டமான் ஆரம்பம் முதலே சரியாகக் கணிப்பீடு கொண்டிருந்தார். இருப்பினும் செல்லச்சாமியின் நடவடிக்கைகள் தமது கட்சிக்கே பாதமானதாக மாறி விடக்கூடும் என்பதையும் உணர்ந்திருந்தார் செல்லச்சாமி தனது மருமகன் ஒருவரை கொட்டாஞ்சேனை பொலிஸ் உதவியுடன் கொலை செய்ததாகவும் அதனை விசாரணை நடத்த உதவுமாறு கோரிய மரணமானவரின் தாயாரிடம் அமைச்சர் தொண்டமான் ''இன்று நான் இதற்காக விசாரணை மேற் கொள்ளலாம், ஆனால் இவ் விசாரணையே கட்சியைப் பிளவுபடுத்தும் செல்லச்சாமி முன்னைய நம் ஆள் இல்லை'' எனத் தெரிவித்தாராம். இதிலிருந்தே அமைச்சர் தொண்டமான் செல்லச்சாமியை பிளவு ஏற்படும்முன்னரே அவர் பற்றிஅறிந்து வைத்திருந்தார் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

இருப்பினும் டி. பி- விஜேதுங்கா தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் இடையில் இருந்த முரண்பாடுகளைப் பயன்படுத்தி மலையகத்தில் தமிழரின் அரசியல் பலத்தை ஆட்டம்காணச் செய்து விட்டார் என்பதே உண்மையாகும் இனிமேல் மலையகத்தில்

ஜெயராஜ்

தொண்டமானுக்கா? செல்லச்சாமிக்கா? அதிகபலம் என்பதை எதிர்வரும் தேர்தல்கள் வெளிக்காட்டக் கூடியயவை ஆகினும் மலையகத் தமிழரின் அரசியல் ஸ்திரணமின்மை பலவீனப்படுத்தப் பட்டு விட்டது-

இவ்வாறாக கண்டிச் சிங்களவரின் அரசியற்பின் புலத்தில் தன்னை உருவாக்கிக் கொள்ள முற்படும் டி-பி- விஜேதுங்கா கரையோரச் சிங்களவரை பொறுத்து தன்னை ஒரு சிங்கள பௌத்த தலைவர்களாகக் காட்டிக் கொள்வதோடு, கடந்த காலத்தில், ஐக்கிய தேசியக்கட்சிக்கு நிலையாக இருந்து வந்த செல்வாக்கைச் சில சலுகைகளை வழங்குவதன் மூலம் நிலைநிறுத்திக் கொள்ள முற்படுகின்றனர்-

கடந்த காலத் தேர்தல்களின் அடிப்படையில் நோக்கும் போது கரையோரச் சிங்களவர்களில் 52 வீதத்தினர் ஐ-தே- காவிற்கே வாக்களித்துவந்துள்ளனர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு 39 வீதத்தினர் மட்டுமே வாக்களித்துள்ளனர். இந் நிலையை தொடர்ந்து பேணுவதற்கு வேலைவாய்ப்புமற்றும்சிலசலுகைகள் போதுமேஎன டி- பி- விஜேதுங்கா கருதுகின்றார்-

அத்தோடு கரையோரப்பகுதியில் உள்ள தீவிர பௌத்த சிங்கள அமைப்புக்களின் ஆதரவை அவர் ஏற்கனவே பெற்றுவிட்டார் என்றே கூறமுடியும் இதற்கு அவர் இலங்கைத் தமிழரின் தேசியஇனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஓரேவழி என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பதன் மூலம் சாதிக்க முற்பட்டுள்ளார்-

டி.பி, விஜேதுங்கா இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்- இப்பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என உலகிற்குச் சித்திரிக்க முற்படுவதும் இதற்கு இராணுவத் தீர்வே ஓரே முடிவு என்பதுமே அதுவாகும்- இதேவேளை தமிழர் தாயகத்தை சிதைப்பதும் தமிழரின் அரசியற் பலத்தை சிதைப்பதோடு இலங்கையின் அரசியலில் அவர்களுக்கென தனித்துவமான இடத்தை இல்லாது ஒழித்தலும் அவரது குறிக்கோளாகும்-

டி பி. விஜேதுங்காவின் இம்முடிவினை அண்மைக்கால அவரது நடவடிக்கைகள் தெளிவாகவே வெளிக்காட்டுகின்றன. இதற்கு சிறப்பான உதாரணமாக இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு குறித்து அவர் இதுவரையில் எந்த விதஅக்கறையும்காட்டாததை சுட்டிக்காட்ட முடியும்-

இனப்பிரச்சினை தீர்வு குறித்து அண்மைக்காலத்தில் பல சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் டி-பி- விஜேதுங்கா அது பற்றி எதையும் பேசுவதற்குத் தயாராக இருக்கவில்லை. சமாதான முயற்சிகளில் ஈடுபட முனைந்தவர்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிய முடியாத நிலையில் தமது முயற்சிகளை கைவிட வேண்டிய நிலையே பொதுவாக ஏற்பட்டதெனலாம்.

அத்தோடு சமரச முயற்சிகள் எதிலும் எவரும் ஈடுபடுவதை அரசு விரும்பவில்லை என்பதற்கு கனடாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளை அரசாங்கம் நிராகரித்ததில் இருந்தே கண்டுகொள்ள முடியும்- வடக்கு-கிழக்குப் பிரச்சினை ஓர் உள்நாட்டுப்பிரச்சினை எனக் கூறிஅரசு இதைத் தட்டிக் கழித்திருப்பினும், உண்மையில்அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வுஎதையும் காணத்தயாராக இல்லை- என்பதையே இது வெளிப்படுத்துகின்றது-

டி-பி- விஜேதுங்கா ''இந்த நாட்டிற்கு என்னதான் கேடு விளைந்தாலும் இலங்கையை ஒற்றையாட்சியின் கீழ் வைத்திருக்கும் யுத்தத்தில் இருந்து பின் வாங்கப் போவதில்லை எனத் தெரிவித்ததில் இருந்தே இவரது அணுகுமுறையில் அரசியல் தீர்வு என்பது பற்றிச் சிந்திப்பதற்கே இடமில்லை என்பதை எவரும் கண்டு கொள்ள முடியும்-

இதேவேளை டி பி. விஜேதுங்கா தனியாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான அணுகுமுறையைக் கொண்டுள்ளார் என்பதல்ல- முழுமையாக தமிழர் தேசியத்தைப் பலவீனப்படுத்துவதிலே அவரது அடிப்படைக் குறிக்கோளாகும்-

அண்மையில் கிழக்கில்தமிழ் மக்களின் பெத்துவ ன அபிப்பிராயம் எதையும் கண்டு கொள்ளாது உள்ளூராட்சி தேர்தல் நடத்தியமையும்சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்த அரசாங்கம் முற்பட்டுள்ளமையும் இதன் வெளிப்பாடேஆகும்- இதன் பிரதான குறிக்கோள் தமிழர் தாயக நிலத்தை துண்டாடும் திட்டமிட்ட செயலின் ஒரு நடவடிக்கையாகும்-

அத்தோடு இலங்கையின் அரசியலில் தமிழ் மக்களின் பங்களிப்பு மற்றும் அவர்கள் வகிக்கும் பாத்திரம் என்பனவற்றையும் இல்லாது ஒழிக்கும் முயற்சியிலும் டி.பி. விஜேதுங்கா அக்கறைகொண்டுள்ளார். இதற்கு வழிசெய்யும் முகமாகவே ஜனாதிபதி தெரிவு முறையை பாராளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்ள அவர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் ஜனாதிபதி தெரிவில் சிறுபான்மை இனங்கள் குறிப்பாக தமிழர்களில் சிங்களத் தலைவர்கள் தங்கியிருக்கும் நிலையை இல்லாது செய்தலே அவரது அடிப்படையான குறிக்கோளாகும். மக்கள் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறையானது ''நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு மீறிய அளவில் அவர்களின் உரிமையைக்கொண்டாட வகைசெய்கின்றது'' என்பது டி.பி.யின் நிலைப்பாடாகும் இந் நிலையில் பாராளுமன்ற முறைக்கு தெரிவு முறை மாற்றப்படும் பட்சத்தில் சிறுபான்மையினரின் எதுவித ஒத்துழைப்பும் இன்றி ஆட்சியை கைப்பற்றிக் கொள்ள முடியும். பௌத்த சிங்கள தலைவராகத் தன்னை முழுமையாக வெளிக்காட்ட முற்பட்டுள்ள டி,பி,க்கு இது மிகவும்தேவையான தொன்று என்றே கூறலாம்.

அதாவது டி.பி. விஜேதுங்காவின் நிலைப்பாடானது சிங்களப் பேரினவாதத்தைக் கிளர்ந்தெழவைத்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் குறுகிய நோக்கம் கொண்டதாகவே உள்ளது சுருக்கமாக கூறின் மலையகத்தில் ஒரு வீரபுரன் அப்புவாகவும் கரையோரத்தில் ஒரு துட்ட கைமுனுவாகவும் டி,பி விஜேதுங்கா காட்சி கொடுக்க முற்படுகின்றார்

ஆனால் டி, பி விஜேதுங்கா தனதுஇம்முயற்சியானதுதமிழரின் அரசியல் ஸ்திரணத்தையும், தாயகத்தையும், சிதைக்கும் வழி முறைகளைக்கொண்டதுமட்டுமல்ல சிங்களவர் மத்தியிலும் பிளவுகள் உருவாகவும் காரணமாக இருப்பது தான் அவரின் அரசியல் எதிர்காலத்தையே நிர்ணயிக்க் கூடியதாக மாறலாம்

இதில் முக்கியமானது கண்டிச் சிங்களவர் என்ற ரீதியில் தன்னை அடையாளம் காட்ட முற்பட்டுள்ளமையாகும், இதுவரை ஐ, தே, கவிற்கு பெரும் ஆதரவு வழங்கிவந்த கரையோரச் சிங்களவரைப் பொறுத்து ஒரு மகிழ்ச்சியூட்டும் காரியமாக இருக்கப்போவதில்லை,

தற்பொழுதே ஐ, தே. கஉயர் பீடத்தினுள் கருத்து முரண்பாடுகள் நிலவுவதாக அறிய முடிகின்றது, டி, பி, விஜேதுங்காவின் போக்கு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, சிறிசேனகூரே போன்றவர்கள் அதிருப்தி கொண்

(2ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் போசாக்கு......

டுப் பொருட்களையும் கொடுத்து மகிழ்விப்பதையும் நேரில் அவதானிக்க முடிந்தது. இது தொடர்பாக ஆசிரியர் ஒருவரை அணுகிய போது ''எமது உள்ளத்து வேதனைகள் இங்கு இவர்களுடனிருக்கும் போது பறந்து விடுகின்றன இவர்கள் ஒவ்வொருவரையும் காலை முதல் மாலைவரை பராமரிப்பதிலேயே மனநிறைவு கொள்கிறோம். கடந்த இரண்டு நாட்களில் 18 பேர் இங்கு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் தான் இங்கு அழுது கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களைப் போல் இவர்களும் நாளடைவில் இணைந்து விடுவார்கள் இவர்களை வளர்ப்பதில் நாம் எதுவித சிரமங்களுக்கும் உள்ளாவதில்லை. வரும்போது இருந்ததைவிட தற்போது இவர்கள் உடல் உளரீதியாக பெருமளவு வளர்ச்சியை அடைந்துள்ளனர்'' என்றார்.

நிர்வாகப்பொறுப்பாளரை நெருங்கியபோது இங்கு இரண்டரை வயது முதல் 5வயது வரையான சிறார்கள் உள்ளனர் இவர்களில் ஆறு வயதை உடைய ஏழு பேர் தற்போது புதிதாக வந்தவர்களில் அடங்குவர். இவர்களை பாடசாலைக்கு அனுப்பும் முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

இவர்களுக்கு வயதின் அளவிற்கு ஏற்ப நிறைஉள்ளதா? என மாதத்திற்கு ஒருதடவை கணிக்கப்பட்டு இவர்களது நிறைபற்றி அறியப்படுகிறது. நிறைகாணாதவிடத்து அவர்களுக்குரிய பரிகாரங்களை டாக்டர்களின் ஆலோசனைகளுடன் மேற்கொள்வோம். இவர்களுக்கான மருத்துவ வசதிகளும் செய்யப் படுகின்றன. வாரத்தில் ஒருதடவை குடும்ப நல சேவையாளர்களுக்கும் மாதத்திற்கொருமுறை விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவ பிரிவினரும் இவர்களை பரிசோதிப்பர். இங்குள்ள ஒவ்வொரு சிறார்கள் பெயரிலும் மருத்துவக் குறிப்பேடுகள் உள்ளன. அவற்றில் அவர்களது நிறைகள் குறிக்கப்படுவதுடன் வளர்ச்சிகாணாத சிறார்களுக்கான மருந்துகளும் பராமரிப்பு பற்றிய விபரங்களும் குறிப்பிடப்படும். நாம் அதற்கேற்ற விதத்தில் இவர்களை தனிப்பட்ட முறையில் பராமரிப்போம். ஒரு மாதத்திற்குள்ளேயே இவர்கள் சரியான வளர்ச்சியை அடைந்துவிடுவார்கள். இந்த நிலையத்தை நடாத்துவதற்கு எமக்கு மாதாந்தம் 60 ஆயிரம் முதல் 70 ஆயிரம் ரூபாவரையில் செலவு ஏற்படுகிறது. இதனை விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவினரே எமக்கு வழங்குகின்றனர்.'' என்றார்.

இங்குள்ள சிறுவர் ஒருவரின் பெற்றோரைச் சந்தித்த போது 'ஆரம்பத்தில் இப்படி உங்கள் பிள்ளைகளை தினமும் பொறுப்பேற்று நாம் பராமரிக்கப் போகிறோம், மாலையில் உங்களிடமே ஒப்படைத்து விடுவோம் என இவர்கள் கூறிய போது நாம் தயங்கினோம். இவர்கள் திருப்பி தருவார்களா என ஏங்கினோம். ஆனால் இன்று மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எனது குழந்தை அங்கு செல்லும் போது சோர்வடைந்து களைப்புற்றுக் காணப்பட்டது. ஒரு வருடத்திற்குள்ளேயே மிகவும் சுறுசுறுப்புடையவனாகவும் பாடி ஆடக்கூடியவனாகவும் இருக்கிறான். வீட்டிற்கு வந்தால் தான் அங்கு செய்தவற்றைச் செய்து காட்டுகிறான். பிள்ளைக்கு வருத்தம் என்றால் கூட மருந்துகள் எடுத்து தருகிறார்கள். நாங்கள் கூட இப்படி எங்கள் பிள்ளைகளை ஒரு நாள் கூட வளர்த்ததில்லை. ஆரம்பத்தில் அங்கு போவதற்கு மாட்டேன் என்று அழுது அடம் பிடித்தவன் இன்று நாம் போய்வாடா என்றால் வரமாட்டேன் என்று அடம் பிடிக்கிறான் என்றால் பாருங்களேன். நாங்கள் இருவரும் காலையில் கூலிக்குப் போனால் மாலையில் தான் வருவோம். அதன்பின் சமைத்து உண்ண இரவாகிவிடும் அதாலை எங்கட பிள்ளைகளையே நாம் கவனிப்பதில்லை. இவர்களது இந்தத் திட்டம் எங்களுக்கு ஒரு வரப் பிரசாதம்'' என்றார் ஆனந்தக் கண்ணீருடன்.

சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவிற்குள் நுழைந்தபோது ஒன்றரை வயது பாலகர்கள் இரு கைகளையும் கூப்பி ''வணக்கம் மாமா'' என்றார்கள். உடல் புல்லரித்தது; ''எங்களைப் பார்க்கவா வந்தீர்கள்'' என்றார்கள். எமது வெறுங்கையை நாமே பார்த்து வேதனையடைந்தோம். மிகவும் அமைதியாக குரல் தளதளக்க ஆமாம் என்றபடி அவர்களை நெருங்கினோம். எம்மைச் சூழ்ந்துகொண்ட அந்தச் சிட்டுக்கள் கால்களையும் கைகளையும் பற்றிக்கொண்டு தமது பாசத்தைப் பொழிந்து தள்ளின. வர்ணிக்க வார்த்தைகளே இல்லாத அவர்களது ஆனந்தக் களிப்பு அந்தப் பால் மணம் மாறாத முகங்களில் பெருக்கெடுத்தன அவர்களிடமிருந்து விலகிச் செல்வதே பெரும்பாடாகி விட்டது.

நேரம் 12-30 ஆனபோது ஆசிரியர் ஒருவர் உணவருந்த வருமாறு அழைத்தபோது அந்த மண்டபத்தைச் சூழ அனைவரும் அமைதியாகச் சென்று உட்கார்ந்து கொண்டார்கள். இல்வர் தட்டில் உணவு பரிமாறப்பட்டதும் அமைதியாக இருந்து சில நிமிடங்களுக்குள்ளேயே தமக்குரிய உணவை அருந்திவிட்டு அவர்கள் வெளியேறினார்கள் அங்கே ''அம்மா'' ஒருவர் இவர்களது முகம் கைகளைக் கழுவி துப்புரவு செய்ததுடன் குடிநீரும் வழங்கியதைக் காண முடிந்தது இவர்கள் உணவருந்திய இடத்தை எட்டிப் பார்த்த போது அங்கே ஒரு சோற்றைக் கூட நிலத்திலோ இவர்களது கோப்பைகளுக்குள்ளோ காணமுடியாதிருந்தது.

எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி முதலாவது ஆண்டை நிறைவு செய்யவுள்ள இப்பராமரிப்புப் பூங்காவின் நிகழ்வுகளுக்காக ஆசிரியர்களும், நிர்வாகத்தினரும் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக அறிந்தோம். இங்கு 69 ஆண்களும் 66 பெண்களுமாக 135 சிறார்கள் பராமரிக்கப்படுகின்றனர். இதன் அமைப்பு வேலைகள்இன்னும் முழுமைபெறாத நிலையில் உள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் தாமாகவே விரும்பி முன்வந்து சிரமதான அடிப்படையில் இதனை முழுமை பெறச் செய்வதற்குரிய வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை நேரில் அவதானிக்க முடிந்தது.

இங்கு நான்கு ஆசிரியர், நிர்வாகப் பொறுப்பாளர், கணக்காளர், இரு சமையல்காரர், இரு பராமரிப்பாளர்களாக பத்து பேர் வரை பணியாளர்கள் உள்ளனர்.

இங்கு புத்தூர் மேற்கு, அச்செழு, சிறுப்பிட்டிதெற்கு, சிறுப்பிட்டி மேற்கு பகுதியைச் சேர்ந்த சிறார்கள் பராமரிக்கப்படுவதாகவும் ஆரம்பத்தில் தயங்கிய பெற்றோர் தற்போது தங்கள் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுவதாகவும் தெரிவித்த நிர்வாகப்பொறுப்பாளர் மாலையில் பெற்றோர் வந்து தங்கள் பிள்ளைகளை வீட்டிற்கு அழைத்து செல்லாதவிடின் தானே நேரடியாக கொண்டு சென்று வீடுகளில் அவர்களை ஒப்படைத்து விட்டு வருவதுடன் பிள்ளைகள் வராது விட்டாலும் நேரில் சென்று விசாரித்து சுகயீனம் ஏற்பட்டிருப்பின் மருத்துவ வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்தார்.

ஆசிரியர்கள் தெரிவிக்கையில் தாம் ஆரம்பத்தில் சிறார்களைப் பார்த்ததற்கும் தற்போது பார்ப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுவதாகவும் இவர்களது நடை உடை, பாவனைகள், பழக்க வழக்கங்கள் அனைத்தும்திருப்தியளிப்பதாகவும்தெரிவித்ததுடன் சிறார்கள் தற்போது தமது பிள்ளைகளை திருத்துமளவிற்கு வளர்ந்துள்ளனர் எனத் தெரிவித்தனர். ஒரு சிறுவன் தந்தை குடித்த மதுப்போத்தலை உடைத்துவிட்டு இனிமேல் குடிக்கவேண்டாம் என தந்தையை கேட்டுக் கொண்டார் எனவும் இதனை தந்தையே நேரில் தமக்குக் கூறியதாகவும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட சிறுவர் போசாக்கு திட்ட பொறுப்பாளர் இரு சுதனை அணுகிய போது எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியே நாம் இதனை நடாத்துகிறோம். சகல இடங்களிலும் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. அதற்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இந்தப் பகுதிகளை இயற்கை அழகுபடுத்த தீவிரமாக முயற்சித்து வருகிறோம் நாம் எதிர்பார்த்ததை விட பெருமளவு வெற்றியை இத்திட்டம் எமக்கு அளித்துள்ளது எமது இத்திட்டத்தின் முழு வெற்றியும் பெற்றோரிலேயே தங்கியுள்ளது. மாலை 5மணியானதும்சிறுவர்கள்பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவதால் வீடுகளில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் மற்றும் சூழல்களால் இவர்கள் நோய்வாய்ப்படவோ தீய பழக்கங்களைக் கற்றுக் கொள்ளவோ சந்தர்ப்பங்கள் உண்டு; எனவே தற்போது சிறுப்பிட்டியில் நாம் முதியோர் கல்வித்திட்டத்தை அமுல்படுத்தவுள்ளோம் அங்கு பெற்றோருக்கான சுகாதாரம் பேணல் தொடர்பான கருத்தரங்குகளையும் வழங்கவுள்ளதுடன் நூல்நிலையம் ஒன்றையும் அமைத்துக் கொடுக்கவுள்ளோம்.

ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், சமையல்காரருக்கும் அவரவர்பணிகள் தொடர்பான கருத்தரங்குகளையும் ஆலோசனைகளையும் பிரதி சனிக்கிழமைகள் தோறும் நடாத்தி வருகின்றோம்.

''இத்திட்டம் மேலும் விரிவடைய எமது சிறார்கள் சமுகத்தில் திடகாத்திரமான நற்பிரஜைகளாக வாழ தலைவரின் தீர்க்க தரிசனம் வெற்றியடைய நலன் விரும்பிகள் எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். அவ்வாறு முன்வருவார்களேயானால் நாம்மேலும்மேலும் பல இடங்களை இதற்கென தெரிவு செய்து எமது சிறார்களின் எதிர்கால வாழ்விற்கு ஒளியேற்ற முடியும் தற்போது ஆயிரம் வரையான சிறார்களே எமது பராமரிப்பில் உள்ளனர். அவர்களைப் போன்று இன்னும் எத்தனையோ ஆயிரம் சிறார்கள் போசாக்கு இன்மையால் வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றனர் இவர்களது எதிர்காலத்திற்கு தமிழீழ மக்கள் ஒன்றுபட்டு உதவுவார்கள் என நம்புகிறேன் என்றார்.


யாழ். செயலகத்தில்
உபயோகிக்கத்தகாத பொருட்களின்

## ஏல விற்பனை

யாழ். செயலகத்தில் உபயோகிக்கத் தகாத பின்வரும் பொருட்கள் 16 - 03 - 1994 புதன் கிழமை காலை 11: 00 மணிக்கு செயலகத்தில் வைத்து ஏலத்தில் விற்கப்படும்.

1) தட்டெழுத்து இயந்திரங்கள் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்)
2) ஏனைய சில காரியாலய உபகரணங்கள் (பட்டியலை களஞ்சியங்கள் நலன்புரிக் கிளையில் பார்வையிடலாம்)
3) பழைய கெசற், கன்சாப் புத்தகங்கள்.

ஏலத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே பணத்தினைச் செலுத்தி பொருள்களைக் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பொருட்களைப் பார்வையிடும் நேரம்:-
16-03-94 புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரை

செயலகம்,
யாழ்ப்பாணம்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

9-3.94 (இ-8808)

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் ஊர்காவற்றுறை ப.நோ. கூ. சங்க முன்னாள் தலைவருமான

அமரர்
### எஸ். எஸ். சீவரெட்ணம் அவர்கட்கு

எமது கண்ணீர் அஞ்சலியையும், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
ஊர்காவற்றுறை ப நோ. கூ. சங்கம்.
(சி-8818)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர், யாழ்/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

1-ம் மாத செயற்பாடுகள்
பிரார்த்தனையும், அஞ்சலிக்கூட்டமும், மதிய போசனமும்

இடம்: யாழ். சுன்னாகம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
காலம்: 20.3.94 ஞாயிறு காலை9.00 மணி

கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அன்னாரின் அபிமானிகள், நண்பர்கள் அனைவரையும் 15.3.94 திகதிக்கு முன்னர் செயலாளருடன் தொடர்பு கொண்டு விழாச் சிறப்புற உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

2 ம் மாத செயற்பாடுகள்

எமது சங்கத்தால் அமரர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக (Orator C. Subramaniam Tropay) 9.4 94இற்கும், 24.4 94இற்குமிடையில் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பெடுத்தாட்டற் (Cricket Ball) போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்களை 1. 4. 94 இற்கு முன்னர் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்,

பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் 12.3.94 சனி மாலை 4 00 மணிக்கு கல்லூரியில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வை. இராசையா
தலைவர்

சேது விபுலானந்தா
கௌரவ செயலாளர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்;
சேது. விபுலானந்தா செயலாளர் ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்;
கந்தரோடை,
சுன்னாகம்.

207, விப ஒபிற் சேவிஸ்,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

(இ-8806)

# சிறிலங்காவில் சீன ஆயுத களஞ்சியம் இராணுவ அதிகாரிகள் பலர் அதிருப்தி

(கொழும்பு)

சீன ஆயுத உற்பத்திக் கம்பனி ஒன்றுடன் விநியோக மையமொன்றை கொழும்பில் அமைப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ள உத்தேசித்துள்ள உடன்பாடு தொடர்பாக பாதுகாப்பு படையின் உயர் அதிகாரிகள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் வட சீன ஆயுதக்கம்பனியான நொறின் கோவுடன் தற்சமயம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பேச்சுவார்த்தைகளில் இக் கம்பனி கொழும்பில் ஆயுதக் களஞ்சியம் ஒன்றை அமைக்கும்படி அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நொறின்கோ நிறுவனம் மூன்றாம்உலகத்தைச்சேர்ந்த பல்வேறு நாடுகளுக்கும் ஆயுதங்கள் விற்கும் ஒரு முன்னணி நிறுவனமாகும். இக் கம்பனி கொழும்பில் களஞ்சியசாலை அமைக்கவசதிசெய்துகொடுப்பது எதிர்கால ஆயுதத்தேவைகளுக்காக சிறிலங்கா தனியொரு வட்டாரத்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தும் என்பதே பாதுகாப்பு படை அதிகாரிகளின் அச்சத்திற்கு காரணமாகும்.

இத்தகைய களஞ்சிய வசதியை அளிப்பதற்கு நொறின்கோ நிறுவனத்தை மட்டும் பாதுகாப்புஅமைச்சு அதிகாரிகள் தெரிவு செய்தது ஏன் என்பது புதிராகஇருப்பதாகக் கூறப்படுகிறது. பாதுகாப்பு படையின் உயர் அதிகாரிகள் பலரும் இத் திட்டம் தொடர்பாக பலத்த தயக்கம் தெரிவித்திருப்பதுடன் சிறிலங்காவிற்கான ஆயுத விநியோகத்தில் நொறின்கோ நிறுவனம் ஏகபோகம்செலுத்த இது வழி செய்யும் எனவும், இந் நிறுவனம் தயாரிக்கும் ஆயுதங்களின் தரம் மற்றும் விலை என்பன போன்ற விடயங்களில் பேரம்பேச முடியாத நிலை ஏற்படலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"பல லட்சம் கோடி ரூபா பெறுமதியான பாதுகாப்புத் தொழில் துறை மீது சீன நிறுவனம் ஏகபோக உரிமை கொண்டாட உள்ளது" என்ற சண்டே ஐலன்ட் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

ஃ அமைச்சர்கள், அரச திணைக்களங்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யும் அதே முறையில்தான் பாதுகாப்புப் படைகளும் பொருள்கொள்வனவு செய்கின்றன. வருடமொன்றுக்கு எவ்வளவு இராணுவத் தளபாடங்கள் தேவை என்பதை முப்படைகளும்முன் கூட்டியே தீர்மானிக்கின்றன. தேவைகள் அடங்கிய பட்டியல் பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகிறது. அமைச்சு எதை எந்தஅளவில்கொள்வனவு செய்வது என்பதைத் தீர்மானிக்கிறது.

ஃ அடுத்தபடியாகப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. சில நிறுவனங்கள் நேரடியாகவும், இன்னும் சில நிறுவனங்கள் கொழும்பில் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்நிறுவனங்கள் மூலமும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றன. எதை, எங்கு, என்ன விலையில் கொள்வனவு செய்வது என்பதைதொழில்நுட்பக்குழு சிபார்சு செய்கிறது.

ஃ இந்த முறையைப் பின்பற்றி சீனாவிடமிருந்து அதிகளவு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பல வருடங்களாகச் சீனாவிடமிருந்துதான் ஆயுதக்கொள்வனவு. இதற்கான காரணம் - சீன ஆயுதங்களின்மலிவுத்தன்மை. மற்றது மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்பதற்கென சீனா பெருமளவில் ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

ஃ சீனா ஆயுதம் கொள்வனவு செய்யும் நாடுகளிடம் நெருக்கடி தரக்கூடிய கேள்விகளை எழுப்புவதில்லை. அந்த நாடுகளில் மனித உரிமைகள் மறுக்கப்படுகிறதா அல்லது யாருக்கு எதிராக ஆயுதங்கள் பாவிக்கப்படப்போகின்றன என்பதுபற்றிச் சீனாவிற்குக் கவலையில்லை. ஆனால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் ஆயுதம் விற்கும்போது பலவிதமான கேள்விகளைக் கேட்கிறார்கள்.

ஃ சீன ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் இராணுவ தளபாடங்களைச் சந்தைப்படுத்துவதில் தமக்கிடையில் போட்டியிடுவது சிறிலங்காவுக்கு வாய்ப்பாக அமைகிறது. குறைந்த விலையில் கொள்வனவு செய்யப் போட்டி மனப்பான்மை உதவுகிறது.

ஃ இராணுவத் தளபாடக் களஞ்சியம் ஒன்றைச் சீனா சிறிலங்காவில் அமைப்பதில் தடைகளும் உள்ளன. தேவையான இராணுவத் தளபாடங்களைசிறிலங்காப் பாதுகாப்புப் படைகள் உடன் பெற்றுக் கொள்ளலாம் இப்போது ஆயுதங்களைச் சீனாவில் இருந்து பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

ஃ ஆயுதங்கள் தேவையான அளவு உள்ளூரிலேயே களஞ்சியப்படுத்தப்படுவதால் களஞ்சியப்படுத்தும் நொறிஸ்கோ நிறுவனத்திடமிருந்தே ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். வேறு நிறுவனங்களை நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. இந்த வகையில் சிறிலங்காவுக்கான ஆயுத விற்பனையில் சீனா ஏகபோக உரிமையைப் பெற்றுவிடும் அத்துடன் கேள்விப் பத்திரங்கள் பெறாமலேயே கூடிய விலைக்கு ஆயுதங்களைக் கொள்வனவுசெய்யும் நிலைக்குச் சிறிலங்கா தள்ளப்படும்

ஃ கேள்விப்பத்திரம்கோரும் முறை மெல்ல இல்லாமல் போக தரம்குறைந்த ஆயுதங்கள் விற்பனைக்கு வரக்கூடும் வேறு ஆயுத உற்பத்தி நிறுவனங்களும் சிறிலங்காவுக்குள் ஆயுதங்களைக் கடத்தக்கூடும் ஆயுதக் களஞ்சியத்துக்குவந்து சேரும் பொருள்கள் எந்தவிதப் பரிசோதனையும் இல்லாமல் தங்குதடையில்லாமல் கொண்டுவர ஏதுவாகும்

ஃ ஆயுதக் கொள்வனவுக் கடையில் அல்லது நவீன சந்தையில் பொருள்களை வாங்குவது போலல்ல ஒரு வருடத்துக்கு முன் திட்டமிட்டு இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவுசெய்வதுதான் முறை அவசர தேவைகளுக்குத்தான் சாதாரண 'கருமபீட' முறையில் கொள்வனவு செய்யப்படுகிறது

ஃ இந்த நிறுவனம் கடந்த வருடம் நடுப்பகுதியில் உயர் மட்ட இராணுவ, பொலிஸ் மற்றும் படை அதிகாரிகளுக்கு ஐந்து நட்சத்திர ஹொட்டல்களில் பெரிய விருந்து வழங்கியது இந்த விருந்து வைபவத்தில் ஓர் இளைப்பாறிய கடற்படை றியர் அட்மிரல், இளைப்பாறிய இராணுவ பிரிகேடியர், ஓர் இளைப்பாறிய விமானப் படைத் தளபதியும் கலந்து கொண்டார்கள். இவர்கள் சீன நிறுவனமான நொறின்கோ நிறுவனத்தின் பெருமைகளைப் பற்றி அங்கு பிரசன்னமாயிருந்த அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினார்கள்.

கடந்த வருடம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவும் கடற்படைத் தளபதிமோகன் சமரசேகராவும் சீன நிறுவனத்தின் ஏகபோக வியாபாரக் கொள்கையைப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வன்மையாக எதிர்த்தார்கள். அதனால் திட்டம் ஒருபக்கத்தில் வைக்கப்பட்டது.

இராணுவத் தளபதி வைத்திரட்னா இளைப்பாறியதும் இந்த வியாபாரக் கொள்வனவுப் பேச்சு வார்த்தைகள் மீளவும் தலைதூக்கவுள்ளன. இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் சீனாவுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.

ஃ கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி ஆயுதக் களஞ்சியத்தை அமைக்க ஒரு வசதியான இடம் தேடும் படலத்தை இராணுவ அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

# 'பயங்கரவாதத்தை' ஒழித்தபின்பே தமிழர் பிரச்சினைக்கு தீர்வு

## -முன்னாள் விமானப் படைத் தளபதி

(கொழும்பு)

''முதலில் வடக்கு 'பயங்கரவாதம்' முறியடிக்கப்பட வேண்டும். அத்துடன் அது மீண்டும் தோன்றாவண்ணம் அடியோடு அழிக்கப்படவேண்டும் அதன் பின்னரே தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்'' என முன்னாள் விமானப் படைத் தளபதி ரொரன்ஸ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; 'பயங்கரவாதிகளுக்கு' எதிராக விமானப்படையினர் 24 மணிநேரத்தில் நடவடிக்கை எடுக்க முடியும் இதற்காக அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய இலக்குகள் மீது குண்டு வீச்சு நடாத்த வேண்டியதுதான். இருந்தபோதும் இவ்வாறான குண்டு வீச்சினால் பொதுமக்கள் பலர் கொல்லப்படுவர் எனவே இதற்கு முழுமையான ஒரு தீர்வு காணப்பட வேண்டுமானால் மக்களின் முழுமையான ஒத்துழைப்புத் தேவை.

சமாதானம் தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெறமுன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழேவைக்கவேண்டும். இதன்பின்னர் இவர்கள் பிரச்சினையை முன்வைக்க வேண்டும் இதை விட்டுவிட்டு இப்பிரச்சினைக்குத் தற்காலிக தீர்வு ஏற்படுமானால் வேறுபிரச்சினைகள் தோன்ற ஏதுவாக அமையும்

எனவே முதலில் செய்ய வேண்டியது யுத்தத்தினால் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்தவேண்டும் அதன்பின்னர் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்கவேண்டும். இதன்பின்னர் பிரதேசரீதியாக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் இதுதான் இப்பிரச்சினை தீர்வுக்கு தேவையானதாகும்

முன்னாள் இரு ஜனாதிபதிகளும் வேறுபட்ட நிலையில் இபபிரச்சினையைத் தீர்க்க முற்பட்டார்கள் ஆனால் தற்போதைய ஜனாதிபதி முற்றிலும் வேறுபட்ட விதத்தில் தீர்க்கத் திடம்கொண்டுள்ளார்

இந்த நடவடிக்கை மூலம் இராணுவத்தினரின் கை ஓங்கி இருக்கின்றது. அதாவது இராணுவ நடவடிக்கைமூலம் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முற்படுகின்றார். இந்த நிலை தொடர்ந்தால் யுத்தத்தை நிறுத்த முடியாத ஒரு நிலைஅரசாங்கத்திற்கு ஏற்படும்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ள இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் உயர் கல்வி பெற்றவர்கள். உலகிலுள்ள நவீன யுத்திகள் அடங்கிய ஆயுதங்களை அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். இவர்கள் புத்திக்கூர்மை உடையவர்கள் இவற்றை நாம் கவனத்திற்கு கொள்ள வேண்டும்.

இதைவிட இவர்கள் தம் உயிர்களைக் கொடுக்க கூடிய தற்கொலைக் கரும்புலிகள் என்பதை நாம் மறந்துவிட கூடாது என மேலும் அவர் கூறினார்

# பப்பாசியிலிருந்து வீழ்ந்த சிறுவன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

பப்பாசி மரத்தில் ஏறி பழம் பறிக்க முற்பட்ட சிறுவன் ஒருவன் அது முறிந்து வீழ்ந்ததில் பரிதாபகரமாக மரணமடைந்தான்.

மருத்துவமனை வீதி கொட்டடிப்பகுதியில் நடந்த இச் சம்பவத்தின்போது கே. புஸ்பராசன் (வயது9) என்பவரே இறந்தவராவார்.

மரம்முறிந்ததில் நிலத்தில் நெஞ்சடிபட வீழ்ந்ததில் நெஞ்சிலும், தலையிலும் உரசல் காயங்களுடன் அறிவற்ற நிலையில் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டசிறிது நேரத்தில்இவர் மரணமடைந்தார்.

## அதிபர்களுக்கான சந்திப்பு

யாழ். வலயம்-2இல் உள்ள 6முதல் 13ஆம் ஆண்டு வரை உள்ள பாடசாலைஅதிபர்கள் தத்தமது கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளரை தேர்வு சம்பந்தமாக இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பின்வரும் இடங்களில் தவறாது சந்திக்கும்படி யாழ். வலயம் 2இன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கேட்டுள்ளார்:

பருத்தித்துறைக் கல்விக் கோட்டம் - வேலாயுதம் ம. வித்தியாலயம்;

கரவெட்டிக் கல்விக் கோட்டம் - திரு இருதயக்கல்லூரி;

மருதங்கேணிக் கல்விக் கோட்டம் - அம்பன் அ. மி. த. க. பாடசாலை.

கோப்பாய் கல்விக் கோட்டம் - அத்தியார் இந்துக் கல்லூரி;

உடுவில் கல்விக் கோட்டம்- இராமநாதன் கல்லூரி.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.

சங்கானை கல்விக்கோட்டம் -விக்ரோறியாக் கல்லூரி.

ஐ. நா. மனித உரிமை குழு கூட்டத்தில்

# இந்தியாவுக்கு எதிரான பிரேரணை பாகிஸ்தான் கைவிட்டது

(சென்னை)

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமை குழு கூட்டத்தில் கொண்டு வரவிருந்த காஷ்மீர் பற்றிய தனது பிரேரணையை பாகிஸ்தான் எத்தகைய முன் நிபந்தனையும் இன்றி விலக்கிக் கொண்டது.

இந்த பிரச்சினையின் மீது வாக்கெடுப்பு தவிர்க்குமாறும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தையின்மூலம்தீர்வு காண முயலுமாறும் பல உறுப்பு நாடுகள் விடுத்த கூட்டு வேண்டுகோளை அடுத்து பாகிஸ்தான் தன் தீர்மானத்தை விலத்திக் கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தீர்மானத்தை விலக்கிக் கொண்ட பாகிஸ்தான் குழுவின் தலைவர் தெரிவிக்கையில் ஈரானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான உயர்நிலை ஆலோசனைகளை அடுத்தும் உறுப்பினர்களின் கூட்டு வேண்டுகோளை அடுத்தும் இத்தீர்மானத்தின்மீது வாக்கெடுப்பை வற்புறுத்தப் போவதில்லை என்று தெரிவித்தார்.

**கனடாவில் நடவடி**

க்குக் கனடாவிற்கு வரும்படி விடுக்கப்பட்ட அழைப்பு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒப்சேபர் பத்திரிகைக்கு நெருங்கிய அரச வட்டாரங்கள் இப்படித்தெரிவித்ததாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

# ஒட்டகப்புலத்தில் இராணுவம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

## ஒரு சிப்பாய் பலி; ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஒட்டகப்புலம் பகுதி சிறிலங்கா இராணுவக் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட இத்தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ஜி 3 ஏ 3 ரக துப்பாக்கி - 01
- இதன் ரவைக்கூடு - 01
- நேற்ரோ ரக ரவைகள் - 14
- நடுத்தர ரவைகள் - 290
- பாக் - 01
- டோச் லைற் - 01

## மன்னார்த்தீவில் வீரச்சாவடைந்தோர்



கப்டன் அன்பரசன்



கப்டன் மணிவண்ணன்



2.ம் லெப் விஜயதாசன்

# திறமை காட்டாத அதிகாரிகளை தளபதிகள் வெளியேற்றவேண்டும்

## ஐலண்ட் பத்திரிகை ஆலோசனை

(கொழும்பு)

முப்படைகளின் தளபதிகளும் இனிமேலாவது தமது திறமைகளை வெளிப்படுத்தாத அல்லது கடமையில் தயக்கம் காட்டும் அதிகாரிகளை கடமையிலிருந்து இளைப்பாறும்படி கேட்டுக் கொள்ளவேண்டும் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று சண்டே ஐலண்ட் இதழில் விசேட கட்டுரையாளர் ஒருவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கிழக்கிலிருந்து வடக்கிற்கு ஆக்கபூர்வமாக நகர்வது என்பது பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரையொன்றில் மேலும் குறிப்பிடுகையில், மண்கிண்டி மலை மற்றும் பூநகரித் தோல்விகளுக்குப் பிறகும்

### கனடாவின்

அதற்கு அரசிடமிருந்து பதில் கிடைத்திருப்பதாகவும் கூறினார்.

கனடா அரசு தொண்டமானை அழைத்தமை தொடர்பாக மறுப்பு தெரிவித்திருப்பது பற்றிக் கேட்டபோது கனடா அரசு அழைக்கவில்லை ஆனால் கனடாவின் மக்கள் சிலர் அழைத்தனர் எனத் தெரிவித்தார்.

வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்தை ஆகக் குறைந்தது வாய்ச்சொல்லினாலாவது கண்டிக்கப்படவில்லை என்றும், வடபிராந்திய இராணுவத் தலைமையின் பொறுப்பற்ற போக்கினால் தான் வடபகுதியில் இராணுவம் பின்னடைவைச் சந்தித்து இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கிழக்கில் தேர்தல் நடத்தப்பட்டிருப்பதைத் தொடர்ந்து வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் கிழக்கு மீண்டும் புலிகளிடம் சேரும் எனவும் தெரிவித்துள்ளார்.

### மன்னார்

கூட்டு முகாமிற்கும் இடையில் 400யார் தூரத்திலிருந்த தாராபுரம் எனும் இடத்தில் அமைந்திருந்த இராணுவ பொலிஸ் கூட்டு மினிமுகாம் மீதே விடுதலைப்புலிகள் துணிகர அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் ஏழு நிமிடங்கள் வரை நடைபெற்ற இவ் அதிவேக அதிரடித் தாக்குதலைத் தொடர்ந்து அம் மினிமுகாமும், 5 காவலரண்களும் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன.

இதன்போது ஆறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர், ஏனையோர் காயங்களுடன் முகாம்களுக்குள் சிதறி ஓடித்தப்பிக்கொண்டனர்.

### லெப் ஜெனரல்

ஆதய இராணுவ மேலாளர் லக்கி அல்கம இராணுவத் தளபதியாக நியமனம் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இராணுவத் தலைமைப் பீடத்தில் செய்யப்படவுள்ள மாற்றங்கள் குறித்து பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவை ஓரங்கட்டுவதே இதன் நோக்கம் என இராணுவ வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கை தொடர்பாக ஜெரி டி சில்வா எதிர்பார்த்த திட்டங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை எனவும் தற்போது வடக்குக் கிழக்கிலுள்ள இராணுவத்தினரிடையேயும் படை அதிகாரிகளிடையேயும் இவருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை எனவும் மேலும் அப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவை ஓரங்கட்ட அரசாங்கம் முனைவதற்கு அவர் ஒரு பௌத்த மதத்தைச் சாராதவர் என்பதே பிரதான காரணம் என அரசியல் வட்டாரங்களில் எண்ணப்படுகின்றது.

### க. பொ. த.

வகுப்புக்கள் இரண்டாம் தவணை ஆரம்ப தினத்தில் தொடக்கப்படவேண்டும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 10.03.94

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1192

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

27-4019, 28-2004, 26 8430, 27-5406, 27-6024, 22-5742, 27-8125, 26-5244, 20-3177, 26-3518, 28-3328, 24-5099, 24 5437, 27-2056, 26-3605, 42-3329, 26-8789, 24 8714.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;-

27-5907, 28-3476, 43-8263, 26-0536' 24-4636 24-5418, 26-0795, 27-9136, 42-9345, 24-4323, 26-7307, 26-1869, 28-9633, 26-6568, 26-7187, 26-2414, 26-4450, 42-1464, 24-5877, 24-1259, 41-9211, 24-9609, 27-9030, 27-8164, 40-9188, 24-6699

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# ஜே. ஆரின் வீட்டின் மேல் வெடித்த பலூன்

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வதிவிடத்தின்மேல் பெரிய பலூன் ஒன்று வெடித்ததை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. பின்னர் அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகளின் தீவிர விசாரணையின் பின்னர் அந்த பலூன் காலநிலை அளவீட்டிற்காக வானிலை அவதான நிலையத்தினரால் அனுப்பப்பட்டது எனக் கண்டறியப்பட்டது.


யாழ். ஸ்ரீதர் திரையில்

இன்று முதல்

ரஜனி நடித்த

BLOOD STONE

(கலர்)

இத்துடன் ஜனவரி-94 ஒளி வீச்சு

சேனல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சிகள்

தினசரி 3.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு 10.30 மணி, 3.00 மணி, 6.00 மணி

(சி-8820)


# மரண அறிவித்தல்கள்

## திரு. எஸ். எஸ். சிவரத்தினம்

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை, தற்போது வவுனியா, பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்)

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் கரம்பொனில் வசித்தவருமான எஸ். எஸ் சிவரத்தினம் 07-03-94-ல் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சபாரெட்னம் தம்பதிகளின் அன்பு மகனும் ஸ்ரெல்லாவின் அன்புக் கணவரும், சுதர்சன், சுதர்ஷினி, சுமந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-03-94-ல் வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, வெளிவட்ட வீதி, வவுனியா (அரசவிடுதி) — (7711) — தகவல்; சுதர்சன் (மகன்)

## கனகராசா விஜயலட்சுமி (விஜயம்)

(கொக்குவில்)

பொற்பதி றோட் கொக்குவில் கிழக்கை சேர்ந்த கனகராசா விஜயலட்சுமி காலமாகிவிட்டார். இவர் கந்தப்பிள்ளை கனகராசாவின் அன்பு மனைவியும், சாந்தகௌரி, சாந்தசொரூபன், (கனடா) சாந்தபவான் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீஸ்கந்தராசா, றஞ்சினி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிறீஜனனி, அனோஜன், வித்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தியாகராசா, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலம் சென்ற பரராசசிங்கம், சந்திரசேகரம் (அவுஸ்திரேலியா), கோபாலசிங்கம் (கோபால்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பொற்பதி றோட், கொக்குவில். — (7707) — தகவல்: க. கனகராசா (கணவர்)

## திருமதி தாமோதரம்பிள்ளை இராசபூபதி

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தற்போது கில்லூன்றி பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் வசிப்பவருமாகிய தாமோதரம் பிள்ளை இராசபூபதி 10-03-94 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், செல்வநாயகம், புஸ்பமணி, முத்துலிங்கம், செளபாக்கியவதி, (முன்னாள் லைடன் தொழிற்சாலை) பிறேமாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பையா மனோன்மணி, மகாலட்சுமி, பாலசிங்கம் (பாலு) ஆகியோரின் மாமியாரும், சுந்தி. தயாநிதி (ஈழநாதம்), தீபன், வேந்தன், மகிந்தன், துவாரகா, கீர்த்திகா, இந்துமதி, திலீபன், கிரிதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். காலஞ்சென்ற சு. யோகம்மா, திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-03-94 இன்று பிற்பகல் 1-00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கில்லூன்றிப் பிள்ளையார் கோவில், வடக்கு வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். — (சி-8819) — தகவல்: சு. தயாநிதி (ஈழநாதம்)